திராவிடன்

ஆசிரியர்: என். வி. நடராசன்.

மாலை: 8 | 1—4—55 வெள்ளி : 14 பக்கங்கள் : விலை 3 அணா | மலர்: 34

'கிருஷ்ணமாச்சாரி பேத்தல்'

இந்திய அரசியலாரின் ஐந்தாண்டுத் திட்டப் போக்கு தென்னாட்டு மக்களைப் பெரிதும் விழிப்படையச் செய்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் ஐந்தாண்டுத் திட்டத்திலுள்ள ஓரவஞ்சனையை எடுத்துக் காட்டிய துவக்கத்தில் சீறி விழுந்தவர்கள்கூட இன்று ஐந்தாண்டுத் திட்டம் வடநாட்டிலே வளப்பத்தையும் தென்னாட்டிலே வறுமையையுந்தான் வளர்த்து வந்திருக்கிறது என மனதார ஒப்புக் கொண்டுள்ளனர்.

இந்நிலையில் டெல்லி சர்க்காரின் வியாபார அமைச்சராய் வீற்றிருந்து — இரண்டுமுறை ராஜிநாமா நாடகம் நடத்தி அதிலே "அபார கீர்த்தி" பெற்ற டி. டி. கிருஷ்ணமாச்சாரி, ஐந்தாண்டுத் திட்டக் கண்டனத்தை எதிர்த்து வடநாட்டுக்கு வக்காலத்து பேசுகிருர்! எனினும் கெட்டிக்காரன் புளுகே எட்டு நாளில்பிசுபிசுத்து விடும் எனக் கூறுகிருர்களென்ருல் டி. டி. கிருஷ்ணமாச்சாரி போன்றவர்களின் பேத்தலைப் பற்றி சொல்லவும் வேண்டுமோ!

ஐந்தாண்டு திட்டம் தென்னாட்டுக்கு—மக்களின் நல் வாழ்வுக்கு ஒன்றும் செய்யவில்லை என்ற குற்றச் சாட்டினை மறுத்து டி. டி. கிருஷ்ணமாச்சாரி பேசுகிருர் கேளுங்கள்.

"ஒரு பக்ரா நங்கல், அல்லது தாமோதர் நதித் திட்டம் வடநாட்டில் இருக்கலாம்; தென்னாட்டில் பெரிய திட்டங்களெதுவும் இல்லாமலுமிருக்கலாம்; ஆனால் தென்னாடு புறக்கணிக்கப்பட்டு விட்டதாக புகார்கூற முடியாது. நாம் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை ஒரே மொத்தமாகக் கவனிக்க வேண்டும்.

தென்னாட்டில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படுகிற தென்ருல். அதிக உற்பத்தி சக்தியும், அதிக நீர்ப்பாசன வசதிகளும் உள்ள வடநாடு தென்னாட்டின் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்யும்; தொழில் உற்பத்தியாகட்டும்—அல்லது வேலை வாய்ப்பாகட்டும்—அவை ஒவ்வொரு துறையிலும் அதுபோலத் தான் நடந்து கொள்ளும்; பரஸ்பரமாக ஒருவரை யொருவர் நம்பியிருக்க முடியும்"

எங்க அப்பா குதிருக்குள் இல்லை யென்ருனும் ஒரு பேத்தல் பேர்வழி! அதுபோல யிருக்கிறது டி. டி. கே. அவர்களின் வாதமும்! எனினும் வடநாட்டில்தான் வளமான திட்டங்கள் செயல்படுத்தப் பட்டிருக்கிறது என்பதை டி. டி, கே. அவர்களும் மறுக்கவில்லை; வடநாடு வளம்பெற்ருல் தென்னாட்டுக்கும் அதில் பங்கில்லாமல் போகாது என ஆரூடம் கூறுகிருர்! அதுமட்டுமல்ல, தென்னாட்டில் உற்பத்தி சக்தியும் நீர்ப்பாசன வசதிகளும் அவ்வளவாக இல்லையாம்! ஆதலாலே வடநாட்டை வளப்படுத்துகிருர்களாம்!

இந்த கிருஷ்ணமாச்சாரிகளின் அரசியல் கண்ணோட்டம் மங்கி விட்டது போலும்! தென்னாட்டில் பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்ற வசதியில்லாம விருப்பதாகவே வைத்துக் கொள்வோம். தென்னாட்டிலுள்ள பெரிய நதிகளிலிருந்து கால்வாய்களை வெட்டி சிறு நீர்ப்பாசனத் திட்டங்களை அமைக்கலாமே! இதனால் நீடித்த நன்மைகளும் பெற முடியுமல்லவா?

உதாரணமாக காவேரி நதி—ஒரு கோடியே 20 லட்சம் ஏக்கர் நிலங்களுக்கு சப்ளை செய்யலாம். ஆனால் இன்று 75 லட்சம் ஏக்கர் நிலங்களுக்குத்தான் பயன்படுத்தப்படுகிறது.

காவேரி நதியைச் சரிவரக் கவனித்தால் இன்னும் 45 லட்ச ஏக்கர் நிலங்களுக்கு பயன்படுமல்லவா? இதற்குக்கூட தென்னாட்டில் வசதியில்லையா? இன்னும் இதுபோல பலவற்றை எடுத்துக் காட்ட இயலும்.

எனவே டெல்லி ஆட்சிபீடத்தாரின் ஓரவஞ்சனையைத் தட்டிக் கேட்கத் துணிவில்லாத கிருஷ்ணமாச்சாரிகள் தென்னாட்டில் இயற்கை வசதியில்லை யென்று பேத்தல் அடிப்பது மிகவும் வருந்தக் கூடியதாகும்.

வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் ஜபர்தஸ்தை எதிர்த்துக் கேட்க துணிவில்லாத கிருஷ்ணமாச்சாரிகள் வாயைப் பொத்திக் கொண்டு வடநாட்டுக்குக் குனிந்து கொடுத்துக் கொண் டிருப்பார்களேயானல் நாம் ஒன்றும் கூறுவதற்கில்லை. அதை விடுத்து வியாக்கியானம் என்றபேரால் பேத்தலில் இறங்குவது வடிகட்டிய பித்தலாட்டமாகும். இந்த கிருஷ்ணமாச்சாரிகளுக்கு மேலும் விளக்கம் தர, ஆசைப்படுகிருேம்.

அண்மையில் டெல்லிப் பாராளுமன்ற(காங்கிரஸ்) உறுப்பினரான தோழர் எஸ். வி. ராமசாமி அவர்களுக்கு ஜெர்மன் நிபுணர் எழுதியுள்ள கடிதத்தில் **நெய்வேலி [illegible]க்கரி கொண்டே சேலம் இரும்பை உருவாக்க முடியும்** என்று குறிப்பிட்டு டி. டி. கிருஷ்ணமாச்சாரியின் பேத்தலுக்குத் தக்க சாட்டையடி கொடுத்திருக்கிருர்.

எனவே, தங்களுக்கு என்று ஒரு சொந்த நாடு இல்லாதவர்கள் அப்படிச் சொல்லிக் கொள்ளவும் உரிமையற்றவர்கள் போல வடக்கு வளம் பெற்ருல் என்ன நாம் என்றும் பிச்சாந்தேகி என கையேந்தி உதவிபெற்று வாழ்ந்தால் போகிறது என்ற போக்கிலே விபரீத வியாக்கியானம் செய்யும் "பணி"யில் தோழர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி இடம் பெற விழுந்தடித்து ஓடுவதின் இரகசியம் நம்க்குப் புரியவில்லை.

—நக்கீரன்

"ஏக இந்தியா கபே!"



ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாடு புறக்கணிக்கப்பட்டுள்ளது என்பதைக் கண்டித்து டெல்லிப் பாராளுமன்றத்தில் தென்னாட் பிரதிநிதிகள் பேசியதை சுட்டிக் காட்டும் வகையில் சுதேசமித்திரன் தனது 27-3-55 இதழில் இச்சித்திரத்தை வரைந்துள்ளது!

தலைமைக் கழகம்—அறிக்கை

புதுவை--காரைக்கால் கிளைகள்

புதுவை வட்டாரத்தில் அமைக்கப்படும் சிற்றூர்—பேரூர்—நகரக்கிளைகள் தென் ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவைகளாகக் கருதப்பட வேண்டும். மாவட்டப் பிரதிநிதிகளை தெ. ஆ. மாவட்டக் கிளைக்கு அனுப்பவேண்டும்,

காரைக்கால் வட்டாரத்தில் அமைக்கப்படும் கிளைகள் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவைகளாகக் கருதப்பட வேண்டும் அந்தக் கிளைகள் மாவட்டப் பிரதிநிதிகளை தஞ்சை மாவட்டக் கிளைக்கு அனுப்ப வேண்டும்,

சி. என். அண்ணாதுரை
பொதுச்செயலாளர்

உதைத்த காலுக்கு முத்தமிடும் பிரகஸ்பதிகள்!

ஆரியமாவது! திராவிடமாவது! என அலட்சியம் ததும்ப ஆணவம் பொங்க, ஆத்திரம் மிளிர கேட்டுவிட்டு ஆகா! 'இவர்கள்' இனிமேல் இதற்கு பதில் கூறமுடியாது என தனக்குத் தானே ஆறுதல் கொள்ளும் நாமக்கல்லார்களுக்கும்'

வள்ளுவன் குறள் தமிழ்நெறி நூலா! அல்ல, அல்ல, 'இவர்கள்' பேச்சை நம்பாதீர். வடமொழி வேதங்கள். பிராமணங்கள் உபநிஷத்துகள், சாணக்கியரின் அர்த்த சாஸ்திரம், இவைகளில் இருந்து வடித்து எடுக்கப்பட்டதே திருக்குறள் என தன்மானமற்று ஈன ஆராய்ச்சி நடத்தும் வையாபுரிகளுக்கும்,

பெற்றெடுத்த பொன்னாட்டை அந்நாட்டின் இன்னருமை மொழியை, கலையை, கலை கண்ட மக்களை இழிவுபடுத்தி தாழ்த்தி அயலானை ஏற்றி போற்றித் தொழுது அடிமைக் காவியம் பாடிய கம்பனை, அவனது காமக் காவியத்தை நாம் கண்டிக்க புகுங்கால், சீறி, சினந்து எழுந்து, இலக்கியத்தை அழிக்கப் புகுந்தவர்கள் என சிறிதும் சிந்தனையற்று நிந்தனை பாடித் திரியும் விசித்திரப் பிறவிகளுக்கும்,

சிராத்தம் செய்வது, தலைவிதி, நான்கு வருணங்கள் இவைகளை குறள் வலியுறுத்துகிறது. சுருங்கக்கூறின், நம்மாழ்வாரும் வள்ளுவரும் ஒத்துப்பேசிக் கொண்டே பாடினார்கள் என பொய்மை ஆராய்ச்சி புகன்ற ஆச்சாரியாரை நன்று, நன்று, உமது அறிவுத் திறன் என துதிபாடி தொழுத சுப்ரமண்யனார்களுக்கும் கீழே கண்ட காட்சியை காணிக்கையாக்குகின்றோம்.

சரிந்துபோன கோயில்களையும், இடிந்து போன மண்டபங்களையும், தேடித்தேடி அலைந்து, காசை கொட்டி புதுப்பிப்பதையும், கவைக்கு உதவாத, காலத்திற்கு ஒவ்வாத, கருத்திற்கு ஏற்காத பண்டைப் புராணங்களை தேடிக் கண்டுபிடித்துஅச்சியற்றி வெளியிடுவதை கரும சிரத்தையாகக் கொண்டும், காசியிலும், காவிரிக்கரையிலும், பல இடங்களில், ஆயிரமாயிரம் ஆரியர்களுக்கு அறுசுவை உண்டி அளித்து, பாதகாணிக்கை தந்து பணிவிடை செய்வதை பெரும் பாக்கியமாகக் கொண்டும், பணத்தை விரயமாக்கி வந்த திருப்பனந்தாள் திருமடத் தம்பிரானுக்கு நீண்ட நாட்களுக்குப் பிறகு நல்லதொரு எண்ணம் தோன்றியிருக்கிறது. அதன்படி பல்லாயிரம் ரூபாய் செலவழித்து திருக்குறளை பரப்ப முடிவு செய்திருக்கிறார். படித்ததும் திடுக்கிட்டு விடாதீர்கள்.

திருவள்ளுவர் பெயரால் விழா மன்றம் ஒன்று எழுப்பி தக்கதொரு அறிஞர்களைக் கொண்டு, திருக்குறள் ஆராய்ச்சிகள் நடத்தி வெளியிட முடிவு செய்திருப்பார். என்று நீங்கள் எண்ணிக் கொண்டால், அது தம்பிரானின் தவறல்ல. கோவில்களையும் மண்டபங்களையும் கட்டி பழகிப்போன தம்பிரான்களுக்கு இத்தகையதோர் புதுமை எண்ணம் எப்படிப் பிறக்கும்? அவர் எண்ணியதெல்லாம் மிக மிக சாதாரணமானதன்று. திருக்குறளை பளிங்கு கற்களில் பொறித்து, அன்னை மீனாட்சி ஆலயத்தின் நடுவே, பாசியும், தூசியும், படர்ந்து கிடக்கும், பொற்றாமரை குளக்கரையிலே பொதிந்து வைக்க வேண்டும் என முடிவு செய்து, கோயில் ஆட்சிகுழுவினரை அணுகி அனுமதி தர வேண்டியிருக்கின்றார். ஆட்சி குழுவின் தலைவர் கே. எம் எஸ். லட்சுமணய்யர் என்பவர்!

இன்றைய தமிழ்நாட்டு காங்கிரஸ் தலைவர் கக்கனும் ஆட்சி குழுவில் ஒரு உறுப்பினராவார். ஆட்சி குழுவில் உள்ள ஒரே ஒரு பார்ப்பனர் எழுந்து ஆலயத்தில் குறளுக்கு என்ன வேலை என கேட்டிருக்கிறார். ஆரிய வலையில் விழுந்த தலைவரும் அதை ஆமோதிக்க அனுமதி மறுத்துவிட்டார்கள், உடனே மதுரை வாழ் தமிழ் அன்பர்கள் கொதித்தெழுந்து தமது கண்டனங்களை வெளியிடலானார்கள். நம் கழக ஏடு "நம்நாடு" கண்டன தலையங்கம் ஒன்று தீட்டி எச்சரித்தது. பார்ப்பன பத்திரிகைகள் யாவும் வழக்கம்போல இருட்டடிப்புச் செய்தன. மதுரையில் இருந்து வெளிவரும் "தமிழ் நாடு" மட்டும் இதனைக் கண்டித்து உபதலையங்கம் ஒன்று தீட்டிற்று. இதற்கிடையில் அறநிலைய ஆணையாளர் தலையிட்டு தனது விசேட அதிகாரத்தைப் பயன்படுத்தி திருப்பனந்தாள் திருமடத்தாருக்கு திருக்குறளை பொறிக்க அனுமதி தந்திருக்கின்றார். உடனே உடல் நலமின்மையைக் காரணமாகக் காட்டிஆட்சிக் குழுவின் தலைவர் பதவியிலிருந்து விலகியிருக்கின்றார்.

திருமடத்தாரின் கோரிக்கை மிகமிகச் சாதாரணமானது செ. த்த மொழியாம் சமஸ்கிருதத்தில் அருச்சிக்காதே; செந்தமிழ் கருவூலமாம் குறளை எடுத்தோது என தம்பிரான் கேட்கவில்லை, கேட்கவும் மாட்டார். அவர் கோரியதெல்லாம் இதுதான். அருளற்று இருள் சூழ்ந்த ஆலயத்தில் குறளொளி வீசவேண்டும் என தம்பிரான்விரும்பி யிருக்கின்றார். இதற்கும் முட்டுக்கட்டையா?

எதற்காகத் தடை? கோயிலுக்குள் குறள் நுழைந்துவிட்டால் பூகம்பமா ஏற்பட்டுவிடும்? அல்லது அன்னை மீனாட்சி குறளுக்குப் பயந்து கப்பலேறி விடுவாளா? அல்லது கோவிலுக்கு வரும் பக்தகோடிகள் குறளைப் படித்து மறுமலர்ச்சி கொண்டு புதுமை கருத்து கொண்டு; புரட்சிசெய்ய ஆரம்பித்து விடுவார்களா? இந்த உள் நோக்கத்துடன் தான் தம்பிரான் குறளை புகுத்துகின்றார் என்ற எண்ணம், காரணமாக இருக்க முடியாதே. தம்பிரான் அவ்வளவிற்குத் துணிந்தவரில்லை! ஏதோ, பொற்றாமரைக் குளத்தில் சங்கப்பலகை மிதந்ததாயும் அதிலே தருக்குடன் வீற்றிருந்த புலவர் பெருமக்கள் வள்ளுவருக்கு இடமளிக்க மறுத்ததாயும் பின்னர் குறளை பலகையில் வைக்க அது அளவில் சுருங்கி குறளுக்கு மட்டுமே இடம் தந்து பெருமை படுத்தியதாகவும் கூறப்படும் கற்பனைக் கதையை மடத்துத் தம்பிரான் படித்திருப்பார்! ஆகா! அந்த பொற்றாமரைக்கரையில் என்றும் அழியாத பளிங்கு கற்களில் திருக்குறளை பொறித்து வைப்போம் என்று எண்ணியிருப்பாரே தவிர வேறு நோக்கம் அவருக்கு இருந்திருக்க முடியாது.

படியாத பாமரர் நூற்றுக்கு 82½ சதவிகிதம் பெருகி யிருக்கும் இந்த நாட்டில், கல்லில் வெட்டி வைக்கப்படும் குறள் காட்சிப் பொருளாக பயன்படுமே தவிர, கல்வியைப் பெருக்காது. கோவில்களிலே இருக்கும் பல்நூறு கல்வெட்டுகளுக்குத் துணையாக இவைகளும் விளங்குமே தவிர பலனெதுவும் விளைவிக்காது. அப்படி ஏதாவது விளையினும் அது ஆழாக்கு எண்ணெயாகவும், காலணா குங்குமமுமாக மாறி பக்தர்கள் கரங்களிலே சிக்கி, இந்த குறள் கல்வெட்டுகள், அபிஷேகம் செய்யப்பட்டு ஆராதனை செய்யப்படுமே ஒழிய, ஆழ்ந்து சிந்திப்பதற்கும், அறிவை பெருக்குவதற்கும் துளியளவும் பயன் தராது என்பதை நாமும் அறிவோம் தம்பிரானும் அறிவார் என்றாலும் இந்த இடத்திலே நாம் சிந்திக்க வேண்டியது, தேவார, திருவாசகங்களோடு கடமை தீர்ந்தது என்றிருந்த தம்பிரான், அத்தி பூத்தாற்போல, திருக்குறளை ஒரு சிறிது பரப்ப முன்வரும் நேரத்திலும் இந்த பழமைவெறி முட்டுக்கட்டையிடுகிறதே என்பதுதான்.

இந்த சம்பவத்தை எண்ணி நாம் வேதனைப்படும்போது அண்மையில் நாமக்கல் கவிஞர் குறளுக்கு உரையொன்று எழுதி வெளியிட்டிருப்பதை நாம் இங்கு எண்ணாமல் இருக்க முடியவில்லை. நாமக்கல்லாரின் உரையிலே புதுமை எதுவும் கிடையாது. பழமை மண்டியிட்டு, பாசி படர்ந்து, ஆரியக்கள்ளி அடர்ந்து கிடக்கும் வையாபுரியார் பாதையில் இவரும் சென்று வேதங்களின் சாரமே குறள் என்று வாய் கூசாமல் தலைகுனியாமல் கூறுகின்றார்.

கோட்டானிடமிருந்து குயில் இசை கற்றது, மந்தியிடம் மயில் நடம் பயின்றது என்று கூறினால் நாட்டில் நடமாடும் நல்லறிஞர் நகையாரோ? இந்தஆரிய விரும்பிகளின் கூற்றுப்படியே, குறள் வேதங்களின் சாரம் என்றே வைத்துக் கொள்வோம். பின் ஏன் ஆரியம் கோவிலுக்குள் குறள் கூடாது என்று கூறுகிறது? ஆரிய அடிவருடிகள் தமது யஜமானர்களைத் திருப்திபடுத்த எவ்வளவுதான் குறளை தாழ்த்தி கூறினாலும் ஆரியம் இவர்கள் கூற்றை நம்ப மறுக்கிறது. குறள் உண்மையில் என்ன கூறுகிறது யென்பதை ஆரியம் அறியும். இவர்கள் என்னதான் கதைத்தாலும் கத்தினாலும், நாட்டில் உள்ள மக்கள் நம்ப மறுப்பர் என ஆரியம் அறியும். அதன் பலன்தான் கோவிலுக்குள் புகாதேயென குறளுக்குத்தடை.

வானமளாவும் கோபுரமும், கோவிலும் கட்டிய தமிழனின் தலையாய நூலாம் திருக்குறளை உள்ளே நுழையாதே என எங்கிருந்தோ வந்து இங்கு புகுந்து கொண்ட ஆரியம் தடுக்கிறது, அதை அடக்க வழியற்று வலுவற்று நம்மை நோக்கி ஆரியத்தைச் சாடும் சிலர்களை நோக்கி பண்டை இலக்கியங்களை பாழ்படுத்த வந்தவர்கள் என பழி சுமத்தும் ஆரிய விரும்பிகளே, யார் தமிழ்இலக்கியத்திற்கு ஊறு விளைவிப்பது? இப்பொழுதாவது அதை அறிந்துகொள்ள முயற்சிப்பீர்களா? கூறுவீர்,

எந்த பார்ப்பனரும் கூறத் துணியாத வகையில் வேதங்களின் சாரமே குறள் என கூறிய, வையாபுரிகளே, நாமக்கல்லார்களே, உதைத்த காலுக்கு முத்தமிடும்பிரகஸ்பதிகளே இவர்களையும் தமிழ் அறிஞர்கள் என மதித்திடும் நல்லவர்களே இந்த சம்பவத்திற்கு என்ன? பதில் கூறப் போகின்றீர்கள் எப்படி பதில் கூறப்போகின்றீர்கள்?

என்னதான் தமிழ். தமிழ், நாங்களும் தமிழை வளர்க்கின்றோம் என்று ஆரியம் கூறினாலும் தனது காரியத்தில் கண்ணாகத் தான் இருக்கும். தனக்கு, தனது இனத்திற்கு ஊறு நேரிடும் பட்சத்தில் அவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்வார்கள், திருக்குறளை மட்டுமல்ல தோழர்களே அதை பெற்றெடுத்த இன்னருமைத் தமிழிற்கு இன்னல் விளைவிக்கவும் தயங்கார் ஏனெனில் இதே ஆரியம் தான் அன்று அருந்தமிழ் நூல்களான, கல்யாணக் காதை, களவுஏடு, கலைக்கோட்டுத்தண்டு, காலகேசி, காக்கைப் பாடினியம், குலோத்துங்கன் சரிதை, குணச்சுவடி, பண்மணி மாலை, பன்னிருபடலம், பாண்டியன்மரபு, பாட்டுமடை போன்றவைகளை எரித்து அழித்து ஒழித்தது. மறவாதீர் இதனை. இனியாவது தெளிவு பெறுவீர்.

—ப. நெடுமாறன்

●

தோழர்களே, திராவிடனுக்கு சந்தாதாரராகச் சேர்ந்து ஆதரவு தர வேண்டுகிறோம்.

கேள்வி? பதில்.

—அஞ்சாநெஞ்சன்—

பார்ப்பன் "ஈயம்" என்ருல் என்ன?

●

கே: அய்யா அஞ்சா நெஞ்சன் அவர்களே உங்கள் கண்ணீர்த்துளி கட்சியில் பார்ப்பான் வேறு பார்ப்பனீயம் வேறு என்று பிரசங்கம் செய்கிறீர்களே அந்த "ஈயம்" என்ன என்பதை உங்களால் விளக்க முடியுமா?

—எம். கேசவன் விழுப்புரம்

ப : தோழரே, உங்கள் கேள்வியிலிருந்து நீங்கள் திராவிட கழகத்தைச் சார்ந்தவர் என்று கருதுகிறேன். சரி யாராயிருப்பினும் எனக்குத் தெரிந்தவரை பதில் கூற வேண்டியதுதானே! இதோ அந்த "ஈயம்" என்பதற்கு விளக்கம் தருகிறேன் அறிந்து தெளிவு பெறுங்கள். **" காமராசரைத்தான் ஆதரிக்கிறோம் ; காங்கிரசை அல்ல "** *என்ற "ஈயத்தை" நினைவுபடுத்திக் கொண்டு விளக்கம் பெறுவீர்களாக.*

*

கே: அஞ்சா நெஞ்சனே, நான் கேட்கும் கேள்விக்கு வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்பது போல பதில் சொல்ல வேண்டும் தெரியுமா? ஓமந்தூர் ரெட்டியார் முதல் மந்திரியாய் இருந்தபோது அவரைப்போல உத்தமர் காங்கிரஸ் கட்சியிலே வேறு ஆள் ஏது என்று பாராட்டினர் பெரியார், குமாரசாமி ராஜா ஆட்சியிலே அவரையும் பாராட்டினர், ராஜகோபாலாச்சாரி ஆட்சி செய்தாரே அப்போதும் அவரைவிட யோக்கியர் யாரும் இல்லை என்று புகழ்ந்தார். இப்போது திருவாளர் காமராச நாடாரை புகழ்கிருர். காமராசருக்குப் பிறகு பெரியார், யாரைப்புகழ்வாரோ தெரியவில்லை. நீங்கள் சொல்ல முடியுமா?

— பி. சங்கரலிங்கம் திருச்சி

ப : தோழரே—இவ்வளவு சம்பவங்களையும் நீங்கள் பொறுத்திருந்து பார்த்தது போல காமராசருக்குப் பிறகு பெரியார், யாரைப் புகழ்ந்து பேசுவார் என்பதையும் சற்று பொறுத்திருந்து பாரும். இதற்கு நான் பதில்கூற இயலாமைக்கு மன்னிக்கவும். ஆனுல் காலம் பதில் கூறும்.

*

கே: ஐந்தாண்டு திட்டத்திலிருக்கும் அநீதிகளை சென்னை காங்கிரஸ் மந்திரிகளும் தலைவர்களும் கண்டிக்கும் போது கம்யூனிஸ்டுகள் மாத்திரம் அந்தத் திட்டத்தைப் போற்றி உங்கள் கழகத்தை தூஷிப்பது ஏன்?

—எ. என். ராமலிங்கம், ஆற்காடு

ப : தோழரே, நம் நாட்டின் பொருளாதார அபிவிருத்தி குறித்தோ அன்றி நம் மாநில மக்களின் வாழ்வைப் பற்றிய பிரச்சினையிலோ கம்யூனிஸ்டுகளுக்கு என்றும் கவலையிருந்ததில்லை. 'ஏக இந்தியா' என்று கூப்பாடு போட்டுக் கொண்டு வடநாட்டு முதலாளித்துவத்திற்கு குனிந்து கொடுப்பதுதான் இங்குள்ள கம்யூனிஸ்டுகளின் பரந்த கண்ணோட்டமாயிருந்துவருகிறது. இப்படிப்பட்ட விசித்திரப் பிறவிகள் தி. மு. கழகக் கொள்கையினை, நடவடிக்கைகளைக் கண்டிப்பதில் ஆச்சரியமிருக்க முடியாதல்லவா!

*

கே: அஞ்சா நெஞ்சனே, தி. க.வும் தி. மு. க.வும் ஒன்று சேர முயற்சி செய்கிருர்களே வெற்றி ஏற்படுமா?

—டி. மாரிசாமி, வட.சென்னை

ப : அன்பரே, அரசியலில் ஆருடம் கேட்கும் பழக்கம் வேண்டாம்.

*

கே: அஞ்சா நெஞ்சனே, பெரியார் ஈ. வே. ரா. அவர்களுக்கு கார் வாங்க வேண்டுமென்று வசூல் செய்கிருர்களே உங்கள் கட்சிக்காரர்கள் உதவி செய்வார்களா?

—டி. நாராயணன், குடந்தை

ப : தோழரே, அவ்வித அவசியம் ஏற்பட்டால் நிச்சயம் செய்வார்கள்.

*

கே: அஞ்சா நெஞ்சனே. கோயில்களில் தமிழில் மந்திரம் ஜெபித்தால் உங்கள் கட்சிக்காரர்கள் கோயிலுக்கு வருவார்களா?

—எஸ். ரங்கசாமி, மதுரை

ப : தோழரே, முதலில் அத்தைக்கு மீசை முளைக்கட்டும். பிறகு சித்தப்பா என்று அழைப்பதைப்பற்றி முடிவு செய்யலாம்.

*

கே: இப்போது சென்னை ராஜ்யத்திலே எட்டு மந்திரிகள் இருக்கிருர்களே. அவர்களில் நல்லவர்கள் யார் என்று சொல்லமுடியுமா?

—டி. ரகீம், பெரம்பூர்

ப : எல்லோருமே தனிப்பட்ட முறையில் நல்லவர்கள்தான். ஆனுல் கொள்கையளவில் எங்களைப் போன்றவர்களுக்கு அவர்களின் போக்கு பிடிப்பதில்லை—அவ்வளவுதான்.

*

கே: இராமாயணம் என்பது கீமாயணமாக எப்படி மாறியது?

—டி. ரகுநாதன், தென்சென்னை

ப : இராமாயணம் என்பது அவ்வளவு கேலிக்கும் கிண்டலுக்கும் இடமளிக்கக்கூடிய பித்தலாட்டச்சரக்கு என்பதை தோழர் ஆதித்தன் அவர்கள் கண்டுபிடித்த நாளிலிருந்து—கீமாயணமாக மாறியது.

"வடக்கில் உற்பத்தியாகும் சரக்குகள் !"

காங்கிரஸ் தலைவர் தேபார் கூறுகிருர்

●

'உடல் உழைப்பில் மக்கள் கொண்டுள்ள வெறுப்பு இந்தியாவின் இரு பிரதான நகரங்களான கல்கத்தாவிலும், பம்பாயிலும், இரு 'புதிய நாகரீகங்க'ளைத் தோற்றுவித்துள்ளது.' என்று, காங்கிரஸ் தலைவர் யூ. என். தேபார் கூறியிருக்கிருர்.

'கல்கத்தாவில் 'பாபு நாகரீக'மும், பம்பாயில் 'சூதாட்ட நாகரீகமும், பிறந்துள்ளன '

'கல்கத்தாவில் குமாஸ்தா வேலைகளுக்கு மக்கள் அதிக ஆசைப்படுகிருர்கள்;'

'தெருவில் ஓடும் இரண்டு கார்களில் எது முந்தும் என்பதற்குக்கூட பம்பாய் மக்கள் பந்தயம் கட்டி சூதாடுவார்கள்,' என்று பொதுக் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிருர்.

'இந்த மனப்போக்கு, இந்தியாவின் முன்னேற்றத்திற்கு உதவாது' என்றும் அவர் கூறியிருக்கிருர்.

கேளாக் காதர்களே இப்போதாகிலும் கேட்கிறதா?

திராவிடநாட்டுப் பிரிவினை என்ற கூச்சலை தி. மு. கழகத்தினர் மட்டும்தான் எழுப்பி வருகின்றனர். இந்தக் கட்சிக்காரர்களின் பிரச்சாரமெல்லாம் தமிழ் நாட்டில்தான் தலைவிரித்தாடுகிறதேயன்றி, தென்னுட்டின் மற்ற பகுதிகளில் காணேம். அதுமட்டுமா; திராவிட நாட்டுப் பிரிவினைக் கொள்கையை "ஆந்திரர் ஆதரிக்கவில்லை. கன்னடத்தார் கவலைப்படவில்லை. கேரளத்தார் கேட்கவில்லை" என்று அரசியல் சிந்துபாடித் திரிந்தனர் நம் தமிழகத்திலுள்ள சில விசித்திரப் பிறவிகள்.

இந்தக் கேளாக் காதர்களுக்கு திராவிட இயக்கம் என்னதான் விளக்கங்கூறி அறிவுறுத்தியும், அவர்களின் காதுகளிலே ஏற்பட்டிருந்த கோளாறினுலோ என்னமோ நமது அறிவுரைகள் கேட்காமல், கீரல் விழுந்த இசைத் தட்டுகள்போல அரசியலில் அபசுரம் எழுப்பி வந்தனர்.

தமிழகம், ஆந்திரம், கன்னடம், கேரளம் ஆகிய நான்கு மொழிவாரி மாநிலங்களும் தனித்தனி நிர்வாக உரிமையுடனும், இரண்டொரு பொதுப் பிரச்னையில் திராவிட கூட்டாட்சியிலும் இயங்கினுல் இந்தியத் துணைக் கண்டத்திலேயே தென்னுடுதான் தலைநிமிர்ந்து நிற்கும் என்பதனை இன்று தேசிய முகாமிலுள்ளவர்களும் அரசியல் யூகம் படைத்தவர்களும் இன்னும் சொல்லப் போனுல். ஆந்திர, கன்னட, கேரளத்திலுள்ள காங்கிரசாரில் சிலரும் உணர்ந்து வருகின்றனர். அந்த அளவுக்கு தி. மு. கழகத்தின் பிரசாரமும், மற்ற நிகழ்ச்சிகளும் தெளிவை உண்டாக்கி வருகிறதென்று கூறினுல் தற்புகழ்ச்சியாகாது என்று எண்ணுகிறோம்.

எனினும் " தலைகொடுத்துத் தமிழகத்தைக் காப்போம்" என பேசித் திரிந்த காரணத்தினுல் தலையே போய்விட்டதே காதுகள் எங்கே இருக்கப் போகிறது என்ற எண்ணிப் புத்திக் கோளாறு கொண்டவர்களும் தங்களின் கண்ணோட்டத்தை எப்போது பார்த்தாலும் பரந்து விரிந்து செலுத்திவந்ததாலே தங்களின் அரசியல் அறிவை அண்டர் ரிப்பேருக்கு அனுப்பிவைத்துவிட்டு மாஸ்கோ பஜனை புரிந்து வரும் பேர்வழிகளும், இன்றுங்கூட திராவிட நாட்டுப் பிரிவினையாவது கத்திரிக்காயாவது—இக் கொள்கையை மற்றவர்கள் ஆதரிக்கவேயில்லை யென்று முணுமுணுத்து வருகிருர்களே அந்த கோஷ்டிகளுக்கு அறிவும் தெளிவும் ஏற்படும் வகையில், சென்ற வாரம் டெல்லிப் பாராளுமன்றத்தில், **கேரள நாட்டுப் பிரதிநிதியான தோழியர் அன்னீமஸ்கரைன் அம்மையார்** *முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னுட்டுக்கு நேரு சர்க்கார் செய்துள்ள ஓரவஞ்சனையான செயல்களை எடுத்துக் காட்டிக் கண்டித்துப் பேசுகையில்* **"முதல் திட்டத்தில் நடத்தப்பட்டது போலவே, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் தென்னுடு நடத்தப்படுமானுல் தென்னுட்டு மக்கள், இந்தியப் பேரரசிலிருந்து நிச்சயமாகப் பிரிந்து விடுவர்"** *என திட்டவட்டமாக அறிவித்திருக்கிருர்கள். இந்த அம்மையாரின் கண்டனத்தை ஆதரித்து* **தென்னுட்டு உறுப்பினர்களான டாக்டர் கங்காதர்சிவா, பி. இலட்சுமையா, சுரேஷ் சந்திரா** *ஆகியோர் இந்தியப் பேரரசை எச்சரித்துள்ளனர்.*

இதுமட்டுமல்லாமல், இப்போது நடைபெற்றுவரும் டெல்லி பாராளுமன்ற கூட்டத்தில், ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தியப் பேரரசு தென்னுட்டுக்கு இழைத்து வரும் வஞ்சனையை விளக்கிக் காட்டி மைசூர் காங்கிரஸ் உறுப்பினர் டி. சுப்ரமண்யம். ஆந்திராவைச் சார்ந்த பிரசாத்ராவ், சென்னை முன்னுள் கல்வி அமைச்சர் அவிஞசிலிங்கனுர், சேலம் பிரதிநிதி இராமசாமி போன்றவர்களும் மனவேதனையுடன் பேசியிருக்கின்றனர்.

தி. மு. கழகத்தின் அடிப்படை கொள்கையான நாட்டுப் பிரிவினைக்கு கேரளம் ஆதரவு தர முனைந்திருப்பது மட்டுமல்ல, நேரு சர்க்காரை தட்டியும் கேட்கிறது. அதுபோலத்தான், ஆந்திரமும், கன்னடமும், தமிழகமும். இந்நிகழ்ச்சியை தி. மு. கழகத்தவராகிய நாங்கள் கற்பனையால் கூறுகிறோம் என்று எவரும் ஏய்த்துவிட முடியாது. பத்திரிகைகளின் வாயிலாகவும் சட்டசபை நடவடிக்கைகளின் மூலமாகவும் அறிவிக்கப்படும் நிகழ்ச்சிகளாகும்.

எனவே இந்த சம்பவங்களாவது கேளாக்காதர்களின் செவிகளில் புகுந்திருக்குமென நம்புகிறோம். அப்படி அச்செவிகளில் புகுந்திருப்பின் அந்த விசித்திரப் பிறவிகள் தெளிவு பெறுவார்களென்று நம்புகிறோம்.

வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் ஓரவஞ்சனையை தக்க ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டி இனியும் இவ்விதமே நடந்தால் தென்னுடு இந்தியப் பேரரசின் பிடிப்பிலிருந்து துண்டித்துக் கொள்ளும் என்று டெல்லி பாராளுமன்றத்திலே — அதுவும் ஆசியாவின் ஜோதியின் எதிரிலேயே தட்டிக் கேட்ட ஆந்திரம், கேரளம், கன்னடம் தமிழகம் ஆகிய திராவிடத்தின் உரிமைக்குரல், இன்றுங்கூட அந்த விசித்திரப் பிறவிகளின் செவிகளிலே ஏறவில்லையெனின், காதுகளிலே — மூளைகளிலே திருத்த முடியாத அளவுக்கு கோளாறு வேறூன்றிவிட்டது என்பது மட்டுமல்லாமல், அவர்களின் அரசியல் பணியிலே நாணயம், நேர்மை, தென்னுடு மக்களின் வாழ்வைப் பற்றிய நல்ல எண்ணம் ஆகியவைகள் அறவே யில்லையென்றுதான் அரசியல் யூகம் படைத்தவர்கள் எண்ணக்கூடும்.

—நக்கீரன்

ஏஜெண்டுத் தோழர்களுக்கு

வணக்கம். மார்ச்சு முடிய நிலுவைப் பட்டியல் அனுப்பப்பட்டிருக்கிறது. உடன் தவருது தொகையை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

நிர்வாகி—திராவிடன்

திராவிடன்

சென்னை : 1—4—55 : வெள்ளி

தெளிவில்லா நெஞ்சங்கள் தெளிவு பெறட்டும்

★

இந்திய சர்க்கார், ஐந்தாண்டு திட்டம் என்ற பெயரால் ஏற்கனவே வளம் பெற்றுள்ள வடநாட்டிலே, மேலும் வளம் கொழிக்கும் வகையில் திட்டங்களைச் செயலாற்றுவதும், அதேசமயத்தில் தொழில் துறையில் பின்தங்கியதான தென்னாட்டைப் புறக்கணித்து வருவதுமான போக்கினை எதிர்த்து திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுவின் முடிவுக்கேற்ப 20-3-55 அன்றும், தொடர்ந்து பல நாட்களும் தோழர்கள் நாடெங்கும் கண்டனக் குரல் எழுப்பி வந்துள்ளனர்.

தி.மு. கழகத் தோழர்கள் எழுப்பிய இக்கண்டனக்குரல், டெல்லிப் பாராளுமன்றத்திலும் எதிரொலித்திருப்பதைக் காணும் நாம் உண்மையிலேயே மகிழ்ச்சி யடைகின்றோம், பெருமைப்படுகிறோம்.

ஐந்தாண்டுத் திட்டத்தைத் தி. மு. கழகம் கண்டிக்கிறதென்றால் வடநாட்டவர்கள் மீது தனிப்பட்ட வெறுப்பு கொண்டல்ல. அதுபோலவே நேரு சர்க்காரை குறைகூற வேண்டும் என்பதற்காகவே கற்பனை செய்து கொண்டு எதிர்ப்பதுமல்ல. இந்திய சர்க்காரின் குறிப்பை ஆதாரமாக வைத்துக் கொண்டே, அவர்களின் ஐந்தாண்டுத் திட்டம் தென்னாட்டுக்கு எந்தெந்தத் துறையில் ஓரவஞ்சனையாக யிருந்து வருகிறது என்பதைப் புள்ளி விவரங்களுடனும் தென்னாட்டு தேசிய முகாமிலேயுள்ள பொறுப்பு வாய்ந்த தலைவர்களின் கருத்தையும், நம்நாட்டின் நிலையையும் ஆதாரமாகக் கொண்டே இக்கண்டன நாள் கூட்டங்கள் நாடெங்கும் நடைபெற்றிருக்கின்றன. இக்கூட்டங்களிலே சொற்பொழிவாற்றிய கழகத் தோழர்களின் பேச்சுக்களை, அவர்கள் எடுத்துக் காட்டிய விவரங்களை சர்க்காரின் சார்பாக சுருக்கெழுத்தாளர்களும் குறிப்பெடுத்துள்ளனர்.

அதுமட்டுமல்லாமல், கண்டனத் தீர்மானங்கள் தந்தி மூலம் நேரு சர்க்காருக்கும் சென்னை சர்க்காருக்கும் அனுப்பப்பட்டுள்ளன, டெல்லிப் பாராளுமன்ற உறுப்பினர்களும் இவ்விவரங்களை அறியும் வாய்ப்பு ஏற்பட்டது. எனவே சென்ற வாரம் டெல்லிப் பாராளுமன்றத்தில் — தென்னாட்டு உறுப்பினர்கள் குறிப்பாக காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்களே, ஐந்தாண்டுத் திட்டத்தின் அவலட்சணங்களை அம்பலப்படுத்திப் பேசியும் இந்திய அரசியலாரைக்கேள்விகள் கேட்டுமுள்ளனர்.

டெல்லிப் பாராளுமன்ற உறுப்பினர்களின் இக்கண்டனங்களை அமைச்சர்கள் எவரும் மறுக்கத் துணியவில்லை. அதற்குப் பதிலாக வியாபார மந்திரியான தோழர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் போன்றவர்கள் வடநாட்டில் வளம் கொழித்தால்தான் என்ன; நமக்குத் தேவைப்படும்போது கேட்டால் உதவி செய்வார்கள் என்று பஞ்சப்பதிகம் பாடி யிருக்கின்றனர்!

எனவே தி. மு. கழகம் நாடெங்கும் நடத்திய ஐந்தாண்டுத் திட்டக் கண்டனக் கூட்டங்கள், வடநாடு—தென்னாடு என்ற துவேஷ மனப்பான்மை கொண்டதால் அல்ல என்பதும் கடந்த எட்டு ஆண்டுகளில் தென்னாடு தொழில் பொருளாதாரத் துறைகளில் எவ்வளவு புறக்கணிக்கப்பட்டு வருகிறதென்பதும் அரசியலில் நேர்மை குணம் படைத்த அனைவரும் ஒப்புக் கொள்ளத்தான் செய்வர்.

ஆனால் இவ்வளவு நியாயமான வாதங்களும் நடவடிக்கைகளும், 'ஏக இந்தியா' கூச்சல் போடும் கோஷ்டியினருக்குத் துவேஷமாகத் தெரிகிறதாம்.

ஐந்தாண்டுத் திட்டத்தில் டெல்லி ஆட்சியாளர் கடைப்பிடித்துவந்த முறை தீதானது என்று டெல்லிப் பாராளுமன்றத்திலேயுள்ள ஆந்திர, கேரள, கன்னட, தமிழக உறுப்பினர்கள் தன்மானத்துடன் தட்டிக் கேட்டுள்ள விவரங்களை ஆர அமர சிந்தித்துப் பார்த்தாவது தி. மு. கழகத்தின் மீது வசைபுராணம் பாடிக்கொண்டு ஏகஇந்தியா என்ற போர்வையில் நடமாடும் தெளிவில்லாத நெஞ்சம் படைத்தோர்—தெளிவு பெறுவார்களாக.

●

இலட்சிய வீரன் இராகவன்

சென்னை திருவல்லிக்கேணி (42-வது வட்டம்) தி.மு. கழகக் கிளையின் உறுப்பினரும், தி. மு. கழகத்தின் மும்முனைப்போராட்டத்தின்போது ஆச்சாரியாரின் வர்ணாஸ்ரம கல்வி முறையை எதிர்த்து (15-7-53) சிறை சென்ற வீரருமான தோழர் இராகவன்அவர்கள் 21—3—55 இரவு 7-மணிக்கு இயற்கை யெய்திய செய்தி அறிந்து திடுக்கிட்டோம். சிறை மீண்டதிலிருந்து ஏற்பட்ட நோய் வாயின் காரணமாகவே தோழர் இராகவன் தனது இளம் வயதிலேயே நம்மைவிட்டுப் பிரிய நேர்ந்தது. தோழர். ராகவன் பிரிவால் வருந்தும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திருச்சி நகர தி. மு. கழகத் தேர்தல்

திருச்சி நகர திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் 27—3—55 காலை 10 மணிக்கு "கருணாநிதி பார்க்கில்" திருச்சி மாவட்ட செயலாளர் தோழர் அம்பில் தர்மலிங்கம் அவர்கள் தலைமையில் துவங்கியது.

திருச்சி நகர் முழுவதும் இருந்து ஏராளமான கழகத் தோழர்கள் காலை 9 மணிக்கே கூடிவிட்டார்கள். தலைவர் தேர்தல் விதிகளை விளக்கிக் கூறியபின் கீழ்கண்டபடி தேர்தல் நடைபெற்றது.

நகர தி மு. க. செயலாளராக தோழர் எம். எஸ். மணி ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

துணைச் செயலாளராக தோழர் சு. அருணகிரியும்—தி. வெ, மாணிக்கமும் போட்டியிட்டார்கள், தோழர் சு. அருணகிரி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பொருளாளராக தோழர் ஏ, நடராசன் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்,

திருச்சி நகர தி. மு. க. செயற்குழு உறுப்பினர்களாக 21 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்,

அடுத்து மாவட்ட பிரதிநிதிகளாக கீழ்க்கண்ட 11 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்,

எம், எஸ், மணி, ஏ, நடராசன், ஜி, பராங்குசம், கே,கிருஷ்ணமூர்த்தி, தொ, பா. கோபாலகிருஷ்ணன், தி, வீ, முத்துகிருஷ்ணன், எஸ், சுப்ரமணியம், எஸ், ஏ. ஜி, ராபி, ஐ, எம், ஷரீப், சு. நெடுமாறன். இ, ராதாகிருட்டிணன்,

மரகதவல்லி-முல்லை வடிவேல்

வ. ஆ. மாவட்ட தி. மு. கழக நிர்வாக உறுப்பினரான தோழர் முல்லை வடிவேல் அவர்களின் துணைவியார், திரு. மரகதவல்லி அம்மையாருக்கு 29-3-55 காலை பெண் குழந்தை பிறந்தது. தாயும் சேயும் நலம்.

திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் பொதுச் சபைக் கூட்டம்

3-4-55 ந் தேதியன்று காலை 9-மணிக்கு கோவை தியாகராயர் படிப்பகத்தில் தோழர்கள் என். வி. நடராசன், கோவை எஸ். ஏ. ராஜமாணிக்கம் ஆகியோர் முன்னிலையில் திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் பொதுச் சபைக்கூட்டம் நடைபெறும் அந்த ஆலோசனைக் கூட்டத்தில் பல பகுதிகளிலிருந்து வரும் பிரதிநிதிகள் திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் தொழிற் சங்கம் குறித்து முக்கிய முடிவுகள் செய்வர்.

பொதுக்கூட்டம்

3-4-55-ந் தேதி மாலை 6-மணிக்கு கோவை சிங்காநெல்லூர் என். ஜி. ஆர். மைதானத்தில் மாபெரும் பொதுக்கூட்டம் திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் சார்பாக நடைபெறும். அக்கூட்டத்தில் தோழர். என். வி. நடராசன் மற்றும் வெளியூர் பிரதிநிதிகள் பலர் பேசுவர்.

வெளியூர் பிரதிநிதிகள்

3-4-55-ந் தேதி நடைபெறும் பொதுச்சபை ஆலோசனைக் கூட்டத்திற்கு கரூர்—திருப்பூர்—பொள்ளாச்சி ஆகிய ஊர் பிரதிநிதிகள் கலந்து கொள்வர் மற்றும் திருச்சி, மதுரை, தூத்துக்குடி, உடுமலைப்பேட்டை ஆகிய ஊர் பிரதிநிதிகள் கலந்து கொள்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

வரவேற்பு

தோழர் என், வி. நடராசன் அவர்களுக்கும் வெளியூர் பிரதிநிதிகளுக்கும் 3-4-55 ந் தேதி காலை 7 மணிக்கு கோவை புகை வண்டி நிலையத்தில் வரவேற்பு அளிக்கப்படும். இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுகிறோம்.

குறிப்பு: அமைப்பாளர் இரா. சுந்தரம் மற்ற பகுதியின் கன்வீனர்கள் அனுமதிக்கப்படும் தோழர்கள் மட்டும் தான் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம். அன்பன்

இரா. சுந்தரம், அமைப்பாளர்

வடஆற்காடு மாவட்ட தி. மு. க. தேர்தல்

ஆம்பூரில் 10-4-55 ஞாயிறன்று நடைபெறும்

பொதுச் செயலாளர் அண்ணா அவர்களின் ஆணைப்படி 10-4-55 ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு வ. ஆ. மாவட்ட தி. மு: கழகத் தேர்தல் ஆம்பூரிலுள்ள கழகக் கட்டிடத்தில, தோழர் என். வி. நடராசன் அவர்கள் தலைமையில் நடைபெறும். வ. ஆ. மாவட்டப் பிரதிநிதிகள் அனைவரும் குறித்த காலத்தில் தவருது கலந்துகொள்ள வேண்டுகிறேன்

குறிப்பு: அன்று மாலை 6-30 மணிக்கு ஆம்பூரில் மாபெரும் பொதுக்கூட்டமும் நடைபெறும்.

அன்பன்

எ. எல். சி. கிருஷ்ணசாமி, செயலாளர்

சரோசா—தியாகராசன்

25-3-55 வெள்ளிக் கிழமை மாலை 4 மணியளவில் தருமபுரி தி. மு. கழக செயலாளர் எம், பி. சுப்பராயன் அவர்களின் மகனார் தியாகராசன்குமாரசாமி பேட்டை தீர்த்தகிரி அவர்களின் திருமகளார் சரோஜா ஆகியோரின் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது, மண விழாவில் தருமபுரி தி. மு, கழக செயற்குழு உறுப்பினர் த. குட்டியப்பன் அவர்களின் தலைமையில் இரா, நெடுஞ்செழியன் அவர்கள் பாராட்டுரை வழங்கினர் இதன் நினைவாக திராவிடன் வளர்ச்சிக்கு ரூ 1 அனுப்பப்பட்டது. வரப்பெற்றோம் நன்றி—நிர்வாகி

தோழர்களுக்கு

- வணக்கம், அச்சியந்திரக் கோளாறினால் இவ்வாரம் திராவிடன் இருவண்ணத்துடன் வெளியிட இயலவில்லை, அடுத்த வாரம் முதல் வழக்கம்போல் இருவண்ணங்களில் காட்சியளிக்கும்.
- 27-3-55—ல் நடைபெற்ற கிளைக் கழகத் தேர்தல்களின் விவரம் பல கிளைகளிலிருந்து அனுப்பப் பட்டிருக்கிறது, ஆனால் கடைசி நேரத்தில் வந்து சேர்ந்தமையால், இவ்வாரம், மதுரை, திருச்சி நகரத் தேர்தல் விவரத்தை மட்டும் வெளியிட்டிருக்கிறோம், பிற அனைத்தும் அடுத்த இதழில் விரிவாக வெளியிடப்படும் என்பதை கழக நிர்வாகிகளுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்,
- தோழர் மா, தங்கவேலர் அவர்கள் திண்டுக்கல்லில் நடைபெற்ற—எடுத்துக் காட்டு நாடகத்தில் அதிக பொறுப்பேற்றிருந்தமையால் இவ்வாரமும் சுமைதாங்கி வெளியிட இயலவில்லை, அடுத்த வாரம் முதல் தவருது தொடர்ந்து வெளிவரும்,

—நிர்வாகி 'திராவிடன்'

மாப்பசான் கதை

விபரீத ஆசை

இரா. இளஞ்சேரன்

ரெனிடோன் சீமாட்டி மென்மையான பஞ்சணையிலே படுத்திருந்தாள். விடிந்த பிறகும் கண்களில் மயக்க உணர்வு தேங்கியிருந்தது. மணம் கமழும் மெத்தை விரிப்பில் சாய்ந்திருந்த அவளை காலையின் மலர்ச்சி புனித கன்னியாக மெருகிட்டது. விவாகரத்து செய்து கொண்ட நிறைந்த நிம்மதி அவளுக்கு. வெறுப்பும், வேதனையுமான அந்த தொடர்பு நேற்று இரவோடு அற்றுப்போய் விட்டது. உணர்வுகளில் அதுவரை யில்லாத புதுமையான துடிப்பு......

'இப்போது போக முடியாது. எஜமானி இன்னும் எழுந்திருக்கவில்லை' பணிப்பெண் வெளியே கூச்சலிட்டாள்.

'அவசரமாக பார்க்க வேண்டும்' கிரான்ஜரி சீமாட்டியின் குரல் இது.

அவர்களது சச்சரவு அவளது மயக்கத்தைக் கெடுத்தது. மெதுவாக எழுந்து வெளியே பார்த்தாள். வானத்தில் பஞ்சுப் பொதிகள் போல மேகங்கள் படிந்திருந்தன. பொலிவு தேங்கிய காலை வேளை...

'விடிவதற்குள் என்ன அவசரம்?' வந்தவளை ரெனிடோன் சீமாட்டி புன்னகையோடு வரவேற்ருள்.

"உன்னிடம் அவசியம் பேச வேண்டும். பெரிய ஆபத்தில் சிக்கியிருக்கிறேன். என்ன செய்வதென்றே தெரியவில்லை" பயத்தால் வார்த்தைகள் நழுவி விழுந்தன. அவளது முகம் காகிதம் போல வெளிறியிருந்தது.

சீமாட்டி படுக்கையில் உட்கார்ந்தாள். அறையில் இளம் இருள் தேங்கியிருந்ததால் பணிப்பெண் கதவுகளை படபடவென்று திறந்தாள்.

கிரான்ஜரின் அழகிய விழிகள் நனைந்திருந்தன. கண்ணீர்க்கோடுகள் கன்னத்தில் உலர்ந்திருந்தன சிவந்த முகத்தில் திகிலின் எல்லையற்ற மதமதப்பு...

ரெனிடோன் சிரிந்தாள், வந்தவளின் மனதிலே வெந்துருகும் வேதனை...

"வெட்கக் கேடான நிகழ்ச்சி நிம்மதியில்லாததால் இரவு முழுதும் ஒரே விழிப்பு...என் நெஞ்சைத் தொட்டுப் பார்த்தால் தெரியும் அதன் படபடப்பு...

வந்தவள் பேசினுள் :

'நேற்று மாலையில் அது எப்படியோ நடந்து விட்டது. வழக்கம் போல அறையிலிருந்து தெருவைப் பார்த்துக் கொண்டிருந்தேன். புகைவண்டி நிலையத்தில் எப்போதும் ஒரே இரைச்சல்... வருவோரை போவோரைப் பார்த்துக் கொண்டிருப்பது எனக்கு பொழுது போக்கு.... .. உனக்குத்தான் தெரியுமே? மயக்கும் மாலை நேரம் நினைவிற்கு இனிமை தந்தது. எதிர்வீட்டு ஜன்னலருகே ஒருத்தி அமர்ந்திருந்தாள். சிவப்பு உடை அணிந்திருந்த அவள் பார்ப்போரை வசிகரிக்கும் அழகி,..என்னைப்போல கவர்ச்சியாக அலங்கரித்துக் கொண்டு அவள் அங்கு நிற்பது எனக்கு வெறுப்பைத்தான் தந்தது.

தெருவில் போவோரைப் பார்த்து அந்த அழகிய குறும்புக்காரி சிரித்தாள். வாலிபர்கள் அவளை ஆசை பொங்க பார்த்தார்கள், வேட்டை நாய்களைப்போல அவர்களது பசித்த விழிகள் அவளை மொய்த்தன. சிலர் சிரித்தார்கள். இன்னும் சிலர் உதட்டைப் பிதுக்கிக் கொண்டார்கள்.

அவளது இந்த விளையாட்டை நான் ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தேன். என்னையறியாமல் ஏதோ ஒரு ரசனை அந்த நிகழ்ச்சியிலே கவிந்து கிடந்தது.

அடிக்கடி அவள் சாரளத்தின் கதவுகளை அடைத்து விடுவாள்; எவனுவது ஒருவன் வீட்டுப் படிக்கட்டுகள் வழி உள்ளே போவான். அப்போதெல்லாம் ஏரி நீரில் தூண்டில் வீசி மீன் பிடிக்கும் நிகழ்ச்சிதான் என் நினைவிற்கு வரும். சில விளுடிகளில் திரும்பவும் சிவப்புடைகாரி அங்கே தென்படுவாள். அவளது நீண்டகண்கள் தெருவை மொய்க்கும்...புன்னகை விரிப்பு...புதியவன் விரைந்து உள்ளே போவான்...அருவருப்பான அந்த மிருகம்—வெட்கங் கெட்ட அவளது சாகஸ கண்வீச்சு...அந்த வேசியை நான் வெறுத்தேன், ஆனல் என் உள்ளத்தில் வேடிக்கையான ஆசை உருவாகும் என்பதை நான் புரிந்து கொள்ளவில்லை!

மனிதர்களின் மனநிலையை அவள் அறிந்திருப்பவள். இதற்கெல்லாம் எத்தனை துணிவுவேண்டும்? தாபம் தொடும் பார்வை—ஆசை தெறிக்கும் புன்னகை—அழகான தலைசாய்ப்பு—சிரமமில்லாத இந்த செயல் என்னுலாகுமா என்ற சபலம் என்னை அரித்தது.

"கண்ணுடி முன் நின்றேன். அவளைப்போல சிரித்தேன். எனக்கே ஆச்சரியமாயிருந்தது. அவளை விட என் கண்வீச்சும் புன்சிரிப்பும் கவர்ச்சியா யிருந்தன. பெருமையால் என் மனம் பூரித்தது. இரவு வந்ததால் தெருவில் சந்தடி யில்லை. சோர்ந்திருந்த அவளும் கதவுகளை அடைத்தாள். எத்தனை தொல்லையான தொழில் ...எனக்கு உல்லாசமான வேடிக்கை, ஏனெனில் தெருவில் போகும் சில வாலிபர்கள் அழகான ரசிகர்கள்..."

ரெனிடோன் படுக்கையில் அயர்வோடு சாய்ந்தாள். கதை கேட்கும் சுவை அவளது நினைவில் நிறைந்திருந்தது.

கிரான்ஜரி சீமாட்டி பெருமூச்சோடு திரும்பவும் பேசினுள்.

"அன்று மாலை நானும் ஜன்னலருகே அலங்கரித்து நின்றேன். எல்லோரையும் என் வனப்பு வசீகரித்தது. பழக்கமாகிப்போன அவளது அழகு என்னுல் தோல்வியடைந்தது. களிப்பில் நான்என்னையே மறந்தேன். வாலிபர்களின் நினைவை என் மோகன மேனி எழில் பறித்தெடுத்தது. மதுவின் போதையென அழகால் என் அகம்பாவம் கொழுந்து விட்டெறிந்தது...அன்றைக்கு ஏனே அப்படி விசித்திரமான மனப்போக்கு...

வாலிபன் ஒருவன் வந்து கொண்டிருந்தான். என் கணவரை விட அவன் நல்ல அழகன் அவனது நீலம் தவழ்ந்த கண்கள் கவர்ச்சியானவை. அந்த சிவப்புடைக்காரிபோல நானும் சிரித்து அழைத்தால் அவன் வந்துவிடுவானே என்ற அச்சம் எனக்கு... மதிப்பான பரம்பரையைச் சேர்ந்த என்னை எவரும் தவருக எண்ணமாட்டார்கள். ஆனுலும் அர்த்தமற்ற, விசித்திரமான வீம்பு ஏதோவொரு விபரித ஆசை அந்த சுழலில் நான் சிக்கிக் கொண்டேன். தெளிவான நினைவிருந்தால் அந்த பைத்தியக்கார வெறிக்கு நான் இரையாகியிருக்க மாட்டேன். எந்த உணர்ச்சிக்கும் நாம் வெகு விரைவில் அடிமையாகி விடுகிருேம்...

இளமையிலிருந்தே என்னேடு வளர்ந்த பிடிவாதம் வேடிக்கையான எண்ணத்திற்கு தூபமிட்டது! இவனிடம் மட்டும் என் அழகை சோதிக்க வேண்டுமென்ற வேகத்தால் நான் தவித்தேன், ஆசை பொங்க அவனைப் பார்த்து சிரிப்பேன் — அவனும் சிரிப்பான்—ஆனல் அவனது எண்ணத்திற்கு பணிந்து விடக்கூடாது என்ற அசட்டுத் துணிவு என்னை கொள்ளையிட்டது.

அந்த வாலிபன் ஜன்னலின் அருகே வந்தான். கவர்ச்சியான உருவம் — ஆர்வம் அலையாடும் விழிகள்...அழகிய வாலிபர்களை நான் எப்போதுமே ஆராதிப்பவள்.

ஆசையெல்லாம் தேங்கிய பார்வை—கவர்ச்சி இழைத்த காந்தப் புன்னகை—ஒயிலான தலைசாய்ப்பு — இனிப்பின் ஏரியிலே அவன் விழுந்து விட்டான்! வாயிலில் காலடியோசை கேட்டது!

பிறகுதான் என் தவறு புரிந்தது. இதயத்தின் படபடப்பு பைத்தியமாக மாறுவதாக பிரமை ...பயத்தால் நான் நடுங்கிச் செத்தேன். வெளியே நிற்கும் வேலையாளிடம் அவன் ஏதாவது பேசுவான். தவருக நினைத்துக் கொண்டால் என்ன செய்வது? நிதானமிழந்த நான் தவியாய்த் தவித்தேன்!

அவன் அழைப்பு மணியை அடித்தால் பார்க்காதிருக்க முடியுமா? எப்படியாவது பணிந்து போய் அவனை வெளியேற்ற வேண்டும். திகில் பாய்ந்த மனதோடு கதவைத் திறந்தேன்.

அவன் சிரித்தபடி வாயிலில் நின்ருன்.

'தயவு செய்து போய் விடுங்கள். என் நண்பர் ஒருவர் உங்கள் சாயலிலிருப்பார். தவறி விட்டது. மன்னித்து விடுங்கள்' நான் தட்டுத் தடுமாறி பேசினேன்.

'எதற்காக இப்படி நேரம் விரயமாக வேண்டும்? நாற்பது பிராங்ஸ் வாங்கிக் கொள். அழகி நீ. உன் மதிப்பு எனக்குத் தெரியும்!' அவனது கவர்ச்சியான உதடுகளில் புன்சிரிப்பு குவிந்திருந்தது. ஆசையின் வேகத்தால் விழிகள் இளம் சிவப்பை பெற்றிருந்தன.

அந்த துணிச்சல்காரன் உள்ளே வந்து கதவைத் தாளிட்டான். அச்சத்தால் நான் மேனி குளிர்ந்தேன். நீண்ட கரத்தால் இடை சுற்றி அவன் என்னை முத்தமிட்டான் ...உண்மையிலேயே அது சுவை நிரம்பிய மூத்தம். படுக்கையறையின் சிங்காரிப்பை, வந்தவன் வியப்போடு பாத்து நின்ருன்,

'உல்லாசமான சொர்க்கம். ஏதாவது அவசரத்தேவை உங்களுக்கு ஏற்பட்டிருக்க வேண்டும். அது தான் இப்படி......'

"இங்கிருந்து போய்விடுங்கள். அவர் இப்போது வந்து விடுவார். தவறு நடந்துவிட்டது."—நான் எவ்வளவோ வேண்டினேன், அவனிடம்.

"நீ இனிமையான அழகி. இந்த சாகசங்களை நான் கேட்டு சலித்தவன். அவர் வந்தால் மதுக்கடைக்குச் சென்று குடித்துக் கொண்டிருக்கட்டும். ஐந்துபிராங் தருகிறேன்." சிரித்து சிரித்து பேசிய அவன் அங்கிருந்த பெரிய புகைப்படத்தைப் பார்த்தான்.

"இவரா உன் கணவர்?"

"ஆமாம்"

"வியாதி பிடித்தவர் போலிருக்கிறது. இவள் உன் தோழியா?" வெளிறியமுகத்தோடு நான் தலையசைத்தேன். அது உன்னுடைய படம்.

"நல்ல அழகி. இவளை எனக்கு அறிமுகப்படுத்தி வைக்க மறந்து விடாதே!" வழக்கம் போல அவனது சிரிப்பில் குறும்பு நிறைந்திருந்தது.

அப்போது மணி ஐந்து. ரிவோல்ட் வரும் நேரம். திடீரென வந்துவிட்டால் என்ன செய்வது? என் படுக்கையறையில் ஒரு அழகிய வாலிபனைக் கண்டால் அவர் என்ன நினைப்பார்? பயத்தால் பதறிப்போன என் உணர்ச்சிகளுக்கு கோர்வையில்லை. என்னைப்போலவே வீம்பு

இலங்கையில் தங்கப்பழம் முழக்கம்

13—3—55 அன்று கொழும்பு கிளையின் சார்பில் வாயர்லஸ் பிராட்வே நாராயணகுரு மண்டபத்தில் தோழர் பா. சதேம் தலைமையில் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு வந்திருந்தனர். 'உரிமைக் குரல்' ஆசிரியர் தோழர் நா. பழனி நாதன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது.

இங்குள்ள மக்களில் சிலர் இந்தியத் தமிழர், இலங்கைத் தமிழர் என பிரிவினை வாதம் செய்கின்றனர். மேல் நாட்டு நாகரீக முறையில் மயங்கி தாய் நாட்டின் கலாசாரத்தை இகழ்ந்து இன மக்களை இழிவு படுத்தும இவர்களைப்பற்றி நான் சொல்ல விரும்புவது ...இங்குள்ள அரசாங்கம் இன்று இந்தியத் தமிழரை வெளியேற்ற திட்டம் தீட்டிக்கொண்டு அமுல் நடத்துகின்றனர். இனி இலங்கைத் தமிழர் என்று கூறும் உங்களையும் தீண்டலாம். பாம்பு அடிக்கும்போது நல்லவர் கெட்டவர் என்று யாரையும் கவனிப்பதில்லை.

எனவே இந்தியத் தமிழர் இலங்கை தமிழர் என்ற பேதத்தை விட்ட தமிழர் என்ற முறையில் ஒற்றுமையாக வாழவேண்டும் எனக் கூறினார்.

அடுத்து இ தி, மு, க. பொதுச் செயலாளர் இரா. அந்மணி அவர்கள் பேசியபின் சிங்களத் தோழர் சி. தருவத்த அவர்கள் சிங்களத்தில் அழகாக மிக விளக்கமாக பேசினார்.

இலங்கையில் நமதுவளர்ச்சி எவ்வித நிலையில் உள்ளது என்பதை இந்த தோழரின் பேச்சை கேட்டவர்களெல்லாம் எண்ணி பெருமைபட்டனர்.

அடுத்தபடியாக கிளர்ச்சி ஆசிரியர் இரா. க. தங்கப்பழம் பேச எழுந்ததும் பலத்த கைதட்டுதலுக்கிடையே பல கிளைகளின் சார்பில் கைத்தறி ஆடைகளும் மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டது. அவருடைய சொற்பொழிவின் சுருக்கமாவது:—

அன்புள்ள தலைவரவர்களே! தோழர்களே, தோழியர்களே உங்கள் அனைவருக்கும் என் அன்புகனிந்த வணக்கம். நண்பர் முக்தார் கூறுகையில் எதிர் பாராத முறையில் நான் வந்ததாக கூறினார். ஏதோ நான் கள்ளத்தோணியில் வந்ததாக யாரும் எண்ண வேண்டாம் அரசாங்கத்தின் அத்தாட்சியுடன்தான் வந்திருக்கிறேன்.

எனக்கு முன் பேசிய சிங்களத் தோழரின் உணர்ச்சிமிக்க சொற்பொழிவை கேட்டீர்கள். அவரின் முற்போக்கு கருத்தினை உணர்ந்து நடக்கும்படியான சூழ்நிலை ஏற்பட என்னவிதமான காரணமாயிருக்க முடியும் என்று கேட்டேன். பல விளக்கங்களை என்னிடம் சொன்னார். உண்மையிலே மகிழ்ந்தேன்.

நான் சென்ற முறை வந்துவிட்டு போன பிறகு எத்தனையோ மாறுதல்கள் நடைபெற்றுயிருக்கின்றது. சென்னை அரசியலில் மாற்றம் இலங்கை அரசாங்கத்தில் மாற்றம். இ தி மு க. வில் எத்தனையோ மாற்றம். தென்னாட்டிலுள்ள தி. மு. கழகத்தில் எத்தனையோ மாற்றம்.

இலங்கை தோழர்கள் எழுதுவார்கள் என்று மட்டும்தான் கேள்விப்பட்டிருந்தேன். இங்கு 'உரிமைக்குரல்' 'அண்ணு' போன்ற பத்திரிகைகளை நமதியக்கத் தோழர்களே முன்னின்று நடத்துகின்றனர். இம்மாதிரியாக இலங்கையில் நமதியக்கம் வளர்ச்சியடைந்திருப்பதை கண்டு உண்மையிலே அகமகிழ்கிறேன்.

நான் முன்பு வந்து சென்ற சிலகாலத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பித்த வீரப் போராட்டத்தில் கலந்து கொண்டு 11 மாதம் சிறை சென்ற காரணத்தால் நமது தோழர்கள் பாராட்டியதை அன்புடன் ஏற்றுக் கொள்ளுகிறேன்.

சென்னை பத்திரிகையில் நீங்கள் கண்டிருப்பீர்கள். திராவிட முன்னேற்றக் கழக போராட்டத்தைப்பற்றி லண்டனிலிருந்து வெளிவரும் Round Table, நியூயார்க்கிலிருந்து வெளிவரும் 'Newyark Times' போன்ற பத்திரிகைகள் முன்பக்கத்தில் நமதுபோராட்டச் செய்திகளை வெளியிட்டது. நாம் வளர்ந்திருக்கிறோம்; நம் வலிமையை உலகம் உணர்ந்திருக்கிறது.

நாம் நடத்திய போராட்டத்தில் ஒரே நாளில் 5000 பேர்களுக்கு மேற்பட்டவர்கள் சிறை சென்றுள்ளார்கள்.

ஏன் ரயில் நிறுத்தப் போராட்டம் ஏற்பட்டது! திருத்தணியில் நடைபெற்ற எல்லை போராட்டத்தில், அங்கு போராட்டம் நடத்திய தமிழர்கள் ரயிலை நிறுத்தி கிளர்ச்சி செய்தனர், இதனை பத்திரிகையில் கண்ட நேரு. இப்போராட்டம் நடத்தியவர்களின் போக்கை சிறுபிள்ளைத் தனமானது முட்டாள்தனமானது என்று கூறினார், எந்த தமிழரின் போராட்டத்தை முட்டாள்தனமென்று கூறினாரோ அந்தத் தமிழர்கள்—திராவிடர்கள் எது முட்டாள்தனம் என்பதை அந்த நேரு அறிய ஓர் நாள் ரயில் நிறுத்தப் போராட்டம் நடத்தினர். ஒரே நாள் போராட்டத்தின் விளைவால் $1\frac{1}{2}$ லட்சம் ரூபாய் செலவு என சென்னை சட்டசபையில் பட்ஜெட் விவாதத்தில் கூறினார் அமைச்சர். ஒருநாள் போராட்டத்திற்கே இப்படியென்றால் தொடர்ந்து போராட்டம் நடந்தால் சென்னை அரசாங்கம் என்னநிலைமையடையுமோ!

உலக சமாதானம் பேசுவதில் எல்லா தேசத்தவர்களும் ஒன்று சேர்ந்து கூறுகின்றனர்.

சீனப்பிரதமர் உலக சமாதானம் வேண்டுமென்றுகூறுகிறார். பாரத பிரதமர் நேருவும் உலகசமாதானம் வேண்டுமென்றுகூறுகிறார். பிரதமர் நேரு; சீனு சென்றுவிட்டு வந்த பிறகு புதிய கோஷம் எழுப்புகிறார் உலகத்தில் சமாதானம் வேண்டும் என்று!

உள்நாட்டில் திருவிதாங்கூர் ராஜ்யத்தில் தமிழர்கள் போராட்டம் நடைபெற்ற போது அடக்குமுறை கொடுமைகள் நடைபெற்றது. ஆனல் இந்திய பிரதமர் கூறுகிறார் உலக சமாதானம் வேண்டுமென்று சீனுக்காரன் உலக சமாதானம் நிலவ வேண்டும் என்று கூறுவதிலே அர்த்தமுண்டு.

நேரு கூறுவதற்கு என்ன யோக்யதை உண்டு! தூத்துக்குடியிலும், கல்லக்குடியிலும், வீரர்களைக் கொன்று குவிக்க காரணமாக இருந்த இந்நாட்டின் பிரதமர் உலகசமாதானம்பற்றி கூறமுன்வந்திருப்பது வேடிக்கையாகத்தானிருக்கிறது.

சீனதேசத்தில் ஆரம்பத்தில் மாணவர்களுக்கு சொல்லித்தருவது விவசாயி விவசாயத்தை நேசி. சிப்பாய் துப்பாக்கியை நேசி, மாணவன் புத்தகத்தை நேசி, என்று! ஆனல் இந்திய நாட்டில் என்ன!

இந்த நாட்டின் பிரதமர் நேரு உலக சமாதானம் நிலவ வேண்டும் எனக் கூறுகிறார். இதனை ஹிந்து பத்திரிகை நேரு தனது கரங்களால் வெண்புறாவை பறக்க விடுவது போல் படம் ஒன்று போட்டு மகிழ்ந்தது ஆனல் நடைமுறையில்!

சமீபத்தில் ஆந்திராவில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் கம்யூனிஸ்டுகள் தோல்வியுற்றதைப்பற்றி என்னநினைக்க முடியும்!

கம்யூனிஸ்டுகளுக்கு செல்வாக்கில்லை என்று அர்த்தமா! என்றால் அது வேறு பிரச்சனை! ஆனல் ஆவடி காங்கிரஸ் மாநாட்டில் அவர்கள் தீட்டிய ''மாதிரி சோஷலிசம்'' தான் மக்களை மயக்கிற்று.

லண்டனிலிருந்து கொண்டே நேரு கூறினார். 'ஆந்திர மக்களே எங்கள் சோஷலிசம் புதுமுறையானது நாங்கள் அமுலுக்கு கொண்டுவரும் சட்டம் சோஷலிசமும், புதுமாதிரியது. எனவே காங்கிரசுக்கு வோட்டு போட மறந்துவிடாதீர்கள்' என்றுஅந்தமுறையில்பிரச்சாரம் செய்து மக்களை மாற்றுகின்றனர். இவர்களுடைய இந்த ''மாதிரி சோஷலிசம்'' எந்த நாட்டிலும் அமுக்கு வந்ததில்லை, மேலும் இது சோஷலிசம் அல்ல இது ''மாதிரி சோஷசம்'' எனக்கூறி மக்களை ஏமாற்றுகின்றனர்.

ஆனல் இன்றுதன் உலகநாதரைப் பற்றி பேசவேண்டிய குன்றக்குடியார் உலக விவகாரத்தை பேசுகிறாரே! இம்மாதிரி எவரெவர் எல்லாமோ அரசியலைப்பற்றி பேச ஆரம்பிக்கின்றனர். இதனை தெரிந்த காரணத்தால்தான் பிளேட்டோ கூட அரசியலில் சில சமயங்களில் பொய் சொல்லலாம், எனக் கூறினாரோ என்னமோ!

இவைபோன்ற செய்கைகள் இல்லாத காரணத்தால்தான் மக்கள் எங்களைப் பின்பற்றுகின்றனர், இங்குள்ள திராவிட முன்னேற்றக் கழகம் இங்குள்ள மக்களின் நன்மைகளையே கவனிக்கும் திராவிடத்திலுள்ள கழகத்திற்கும் இங்குள்ள கழகத்திற்கும் அரசியலில் எவ்விதமான சம்பந்தமும் கிடையாது. உலகிலுள்ள எந்த அரசியல் கட்சியும் செய்ய நினையாத, செய்ய முடியாத பணியை திராவிட முன்னேற்றக் கழகம் செய்துவருகிறது. அந்த சமுதாய சீர்திருத்தத்தின் பிறகு அரசியல் பொருளாதாரம் ஏற்படும் என்ற நம்பிக்கை எங்களுக்குண்டு.

எனவே நாங்கள் செய்த பணியின் எதிரொலி நமது கொள்கை மக்கள் மத்தியில் நன்மதிப்பு பெருவதைக் காண மனம் பூரிப்படைகிறோம். அந்த பணி புரிய குரோத மனத்தைவிட்டு நல்ல மனதுடன் வாரீர் எனக்கூறி எனது உரையை இத்துடன் முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

—திரட்டியவர்: வி. எஸ். முருகன்

விபரீத ஆசை—தொடர்ச்சி

கொண்டவன் அவன், ரிவோல்ட் வருவதற்குள் அவனது விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும். வேறு வழியில்லை. நான் சொல்வது புரிகிறதா. உனக்கு?"

கிரான் ஜரியின் குரலில் அழுகை நிழலிட்டது. ரெனிடோன் தலையணையில் முகம் புதைத்து உரக்கச் சிரித்தாள்,

"அவன் எப்படியிருப்பான்?" குழந்தை உணர்வோடு அவள் கேட்டாள்.

"நல்ல அழகன்"

"பின் அவனை உனக்கு ஏன் பிடிக்கவில்லை?"

"ஆனல் நேற்று போல இன்றும் வந்து விட்டால் என்ன செய்வது? அவன் துணிச்சலானவன். இதை எப்படி சமாளிப்பதென்றே எனக்குத் தெரியவில்லை"

'போலீசாரிடம் சொல்லி அவனை கைது செய்ய வேண்டும்.'

'காரணமாக எதைக் காட்டுவது?'

'இரண்டு மாதமாக என்னைச் சுற்றி வந்து தொல்லை தருகிறான் என்று நீ தலைமை அதிகாரிக்குத் தெரிவித்தால் அவர் போலீஸாரை அனுப்புவார்' ரெனிடோன் படுக்கையிலிருந்து அயர்வோடு எழுந்தாள்.

'அவன் நடந்ததை அவர்களிடம் சொல்லி விட்டால் என்ன செய்வது?'

'நீ பெருமை பொருந்திய சீமாட்டி. உன் பேச்சைத்தான் எல்லோரும் நம்புவார்கள்'

'இதைச்செய்ய எனக்குத் துணிவில்லை. அவன் போலீஸாரிடம் சிக்கினுல் என் மானமே போய் விடும்!' கிரான்ஜரியின் குரலில் கலங்கிய உணர்வின் வேதனை தகித்தது.

'உன் சார்பு சாட்சிகளால் அவனுக்கு தண்டனை நிச்சயம்'

'என்ன தண்டனை?'

'மான நஷ்டத்திற்கு வேறு என்ன கிடைக்கும்? சிறைவாசம் தானே!'

'அதுவும் முடியாது. அவன் படுக்கையில் இருபது பிராங்ஸை போட்டுவிட்டு போயிருக்கிறுன்'!

'இவ்வளவுதானு?'

'ஆமாம்'

'என்னைப் பொறுத்தவரை இது குறைந்த — கேவலமான தொகை'

'அந்த இருபது பிராங்ஸை என்ன செய்வது?'

'அதைக் கொண்டு எதையாவது வாங்கி ரவோலுக்கு பரிசாகக் கொடு' ரெனிடோன் சீமாட்டி சிரிப்புத் தவழ சொன்னுள்.

ஆர். லோகநாதன் & பிரதர்ஸ்

[Lorry Goods Booking & Forwarding Agencies]

தலைமை ஆபீஸ் : 26, லாரி ஸ்டாண்ட் ஆனைகவுனி, மதருஸ்-1

பார்சல் ஆபீஸ் : 148, தங்கசாலைத் தெரு, சென்னை-1



மதருஸிலிருந்து சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்பத்தூர், பாலக்காடு, மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, பழனி, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோயில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, ராஜபாளையம், ராமநாதபுரம், சிவகாசி, தேனி, கம்பம், கூடலூர் முதலிய ஊர்களுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் ஏற்றுமதி செய்கிறோம்.

N. B:—திருச்சூர், கொச்சி, திருவனந்தபுரம், கள்ளிக்கோட்டை, ஆந்திரா ஜில்லா முதலிய ஊர்களுக்கு முழுலோடுகளாக ஏற்றுமதி செய்கிறோம்.

கிளை ஆபீஸ்: 92, தெற்கு ஆவணி மூலவீதி, மதுரை
,, 103-1/127. பழனி ரோடு, திண்டுக்கல்
,, கல்மண்டபம் சாத்தூர் ரோடு, விருதுநகர்
,, வடக்குரதவீதி, திருநெல்வேலி டவுன்

"மூக்கறுபட்ட அமைச்சர்!"

தோழர் எம். பக்தவத்சலம் அவர்கள்
சென்னை

விவசாய அமைச்சரே, வணக்கம். சென்னை சட்ட சபைக் கூட்டத்தில் கல்லக்குடி போராட்டத்தைக் குறித்து கேள்வி கேட்டதற்குத் தாங்கள் கூறிய பதிலை பத்திரிகை வாயிலாக அறிந்தேன். இன்றைய ஆட்சி பீடத்தில் உட்கார வைக்கப்பட்டுள்ள தங்களைப் போன்றவர்களிடமிருந்து நாணயமான பதிலை எதிர்பார்க்க முடியாதென்பதை நான் மட்டுமல்ல அனைவரும் அறிந்ததேயாகும்.

ஐயாயிரம் பேர்களை சிறைக் கொடுமைக்கு ஆளாக்கியும், நான்கு இளைஞர்களின் மகத்தான உயிருக்கே வேட்டு வைத்தும் மற்றும் பலவிதத் தொல்லைகளைச் செய்த அரசியலார் இதற்கு அடிப்படையான பிரச்னையைப்பற்றி பதில் சொல்லும்போதாகிலும் சற்று மனிதாபிமானத்துடனும் ஜனநாயகப் பண்புடனும் நடந்து கொள்ள வேண்டாமா யென்று கேட்கிறேன்.

டால்மியாபுரத்தை கல்லக்குடியென மாற்றுமாறு தி. மு. கழகம், தோழர் கருணாநிதி தலைமையில் போராட்டம் நடத்தியது அரசியலாருக்குத் தெரியுமா, பலபேர் அடக்குமுறைக்கு ஆளாக நேர்ந்த விவரத்தைச் சர்க்கார் அறிவார்களா? ஏன் அந்தப் பெயர் மாற்றப்படவில்லை யென்பதாக, சட்டசபை உறுப்பினர்களான ஏ. கோவிந்தசாமி, டி. சண்முகம் ஆகியோர் கேள்வி கேட்டதற்குத் தாங்கள் சொல்ல வேண்டிய பதில் என்ன? பெயர் மாற்றத்தைப் பற்றி சென்னை சர்க்கார் ஒன்றுஞ் செய்ய முடியாது என்று கண்டிப்பாகத் தாங்கள் பதில் கூறி யிருந்தால்கூட கவலைப்பட்டிருக்க மாட்டோம். சென்னை சர்க்காரின் போக்கு இவ்வளவுதான் என்று எண்ணியிருக்கலாம்.

ஆனால் தாங்களோ "அந்தப் போராட்டம் ஆண்டுக்கு ஒருமுறை நடப்பதுதான்; அதுகூட பத்திரிகையில் வந்த செய்திகள் மூலமாக சிலவற்றை அறிந்தேன். இப்படி எத்தனையோ நடைபெறுகிறது. அவைகளைப்பற்றி யெல்லாம் கவனத்தில் வைக்க முடியுமா?" என்று பதில் கூறியிருக்கிறீர்.

இதே பிரச்னையைப் பற்றி தோழர் ஆச்சாரியார் அவர்கள் முதலமைச்சரா யிருந்தபோது உத்யோக பூர்வமாக பதில் கூறியிருக்கிறார். சிறை சென்றவர்கள் இத்தனை பேர்; உயிர் பலியானவர்கள் இவ்வளவு என்பதாகப் புள்ளி விவரங்களுடன் கூறியிருக்கிறார். அந்த முக்கியத்துவமான பிரச்னையைப் பற்றி இன்று தாங்கள் நையாண்டி செய்வதுபோல பேசுகிறீர். இந்தப் போக்கு சாதாரண பக்தவத்சலம் அவர்களிடமிருக்கலாம். "கனம்" பக்தவத்சலமாகிய தாங்கள் இப்படி பதில் கூறுவது பொறுப்புள்ள செயலாகுமா யென்று கேட்கிறேன்,

தி.மு.கழகத்தின் மும்முனைப் போராட்டங்களில் ஒன்றாகிய கல்லக்குடி போராட்டம் தங்கள் புத்திக்கு சரியற்றதென்று தெரியலாம். அதைப்பற்றி ஒன்றும் சொல்வதற்கில்லை. ஆனால் மாற்றுக் கட்சியினரின் மனம் வேதனையடையும்படி பதில் கூறுவது மக்கள் ஆட்சி என்று பறைசாற்றி வரும் மந்திரிகளுக்கு அழகாகுமா யென்று கடாவுகிறேன்.

தேசியப் போராட்டத்தின் போது வெள்ளைக்கார ஏகாதிபத்திய வர்க்கம் கூட இவ்வளவு பிற்போக்குத்தனமான பதில் சென்னதில்லை. ஆனால் தாங்களோ வடநாட்டு ஆதிக்கத்திற்கு உட்பட்ட அமைச்சர் குழுவில் ஒருவரா யிருந்துகொண்டே அரசியல் நேர்மையையும் மறந்து மாற்றுக் கட்சியினரைப் புண்படும்படி பேசியிருக்கிறீர்.

அதிலும் தாங்கள் மந்திரியானதோ விசித்திரத்திலும் விசித்திரம்! பொதுத்தேர்தலில் மக்களின் பேராதரவுக்கு லாயக்கற்றவர் என்று நிருபிக்கப்பட்டு "மூக்கறுபட்டவர்" (தோல்வியடைந்தவர்) பிறகு மேல் சபை மூலமாக மந்திரியானீர்கள். இந்த லட்சணத்தில், தி. மு. கழகப் போராட்டத்தையும் அதிலே ஈடுபட்டுத் தூய்மையான பணியாற்றிய ஆயிரக்கணக்கான வீரர்களையும், உயிர் தித்திப்பையும் எண்ணாமல் அடக்கு முறை வெறிக்கு பலியான இளைஞர்களின் தியாகத்தையும் நையாண்டி செய்வது நேர்மையாகுமா என்பதை இனியாகிலும் சிந்தித்துப் பார்க்குமாறு தெரிவித்துக் கொள்கிறேன்.

தோழர், பக்தவத்சலம் கனம். அவர்களே இப்பேர்ப்பட்ட பேச்சுகளுக்குப் பெயர் நையாண்டி அல்ல; அரசியல் யூகமற்ற பேத்தல் என்றுதான் விவரம் அறிந்தோர் எண்ணி உமது போக்கினைக் கண்டு எள்ளி நகையாடுவர்!

எனவே அமைச்சர் பக்தவத்சலனாரே: தி. மு. கழகத்தைக் குறித்து கேட்கப்படும் கேள்விகளுக்கு நீங்கள் ஆதரவாக பதில் சொல்ல வேண்டும் என்று நாங்கள் எதிர் பார்க்கவில்லை. ஆனால் தி. மு. கழகக் கொள்கையையும் அதன் கண்ணியத்தையும் பொறுப்பற்ற முறையிலோ அல்லது குத்தலாகவோ தாக்கிப் பேசாதீர்கள். இன்றைய அரசியல் சூழ்நிலையில் அப்போக்கு கடைந்தெடுத்த மட்டரகச் செய்கையாகும் என்பதைத் தங்களுக்குப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள
கூத்தரசன்

●

அதிகாரமின்மையா அலட்சியமா?

★

தோழர். சி. சுப்ரமண்யம் அவர்கள்
சென்னை

நிதி அமைச்சரே, வணக்கம் இலங்கை வாழ் தமிழர்களின் அவல நிலை குறித்து சட்டசபையில் உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளுக்குத் தாங்கள் கூறிய பதிலை கண்டு திடுக்கிட்டேன் வருந்தினேன்.

இதுவரை இலங்கையிலிருந்து விரட்டப்பட்ட அகதிகளின் எண்ணிக்கை 2000 பேர் என்று கேள்விகளுக்குத் தாங்களே பதில் கூறிவிட்டு, **"இது அவ்வளவு பெரிய எண்ணிக்கையல்ல. இவர்களுக்கு உதவி செய்ய வேண்டியது அவசியமென்று சர்க்கார் கருதவில்லை. உதவி அவசியம் என்று தோன்றினால் பிறகு கவனிக்கலாம்"** என்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

அமைச்சர் சுப்ரமண்யனாரே இது போல இந்திய அரசாங்க அமைச்சர்களில் யாராகிலும் பதில்கூறியிருந்தால் ஆச்சரியப்பட்டிருக்கமாட்டேன். தமிழர்களுக்கு இலங்கை அரசினர் செய்யும் கொடுமைகளைப் பற்றி இலங்கைத் தமிழர் காங்கிரசின் தலைவரே மனவேதனையுடன் குமுறியிருக்கிறார். அதுமட்டுமல்லாமல் இலங்கையிலிருந்து திரும்பிவரும் தமிழர்கள் அநாதைகளாகத் திரியும் காட்சியையும் நாம் காண்கிறோம்.

ஏற்கனவே வேலையில்லாத் திண்டாட்டத்தினால் சென்னை மாநில மக்கள் வாழ்விழந்து தவிப்பது போதாதென்று— இலங்கைவாழ் தமிழர்களும் இக்கொடுமைக்கு ஆளாக நேரிட்டிருக்கிறது. இந்நிலையில் இலங்கை அகதிகள்பற்றி சர்வசாதாரணமாகத் தாங்கள் பதில் அளித்திருப்பது உண்மையிலேயே வெட்கமும் வேதனையும் படக்கூடிய செய்கையாகும்.

வடநாட்டு அகதிகளுக்கு இதுவரை இந்திய சர்க்கார் செலவழித்துள்ள 600 கோடி ரூபாய்களுக்கு மேலான செலவும், மற்ற ஏற்பாடுகளையும் எண்ணிப் பார்த்து அதேசமயத்தில் இலங்கைத் தமிழர்கள் பிரச்னை குறித்து தங்கள் பதிலையும் நினைத்தால் உள்ளம் குமுறுகிறது.

அமைச்சர் சுப்ரமண்யனாரே இலங்கை அகதிகளைப்பற்றி மனமாரத்தான் இந்த பதிலைத் தெரிவித்தீர்களா அல்லது இந்திய சுயராஜ்ய அரசியல் சட்டப்படி சென்னை சர்க்காருக்கு இலங்கை தமிழர்களைப்பற்றி திட்டவட்டமான முடிவு செய்ய அதிகாரமில்லை என்ற காரணத்தில் உண்மைக்கு மாருக பேசியிருக்கிறீரா? சற்று மனசாட்சியுடன் கூறுங்கள்.

ஏக இந்தியாவின் ஆட்சி முறையின் லட்சணமே இதுதான் போலும்!

அன்புள்ள
கூத்தரசன்

●

தோழியர் டாக்டர். சூசிலா நய்யார்
புதுடெல்லி

டெல்லி மாநில சட்டசபைத் தலைவரே, நலம் வேண்டுகிறேன். சுயராஜ்ய ஆட்சியில் மக்களின் வறுமையை ஒழிக்க செயல் முறையில் ஒன்றும் செய்யாவிட்டாலும், மற்ற திருவிளையாடல்களில் மட்டும் குறைவில்லை.

டெல்லி மாநில சட்டசபை இனி **"வித்வான் சபை"** என்று அழைக்கப்படுமென சென்ற வாரம் அறிவித்திருக்கிறீர்கள். இதனை டெல்லி மாநில சட்ட சபையிலுள்ள அனைவருமே கைகளைத்தட்டி வரவேற்றதாகவும் தெரியவருகிறது. வெள்ளையர் ஆட்சி வெளியேறிய சமயத்திலே சட்டமன்றம் பாராளுமன்றம் என்று அழைக்கப்பட்டு வந்ததானது, இன்று லோக்சபா, ராஜ்பசபா என வடநாட்டு ஆதிக்கக்காரரால் மாற்றப்பட்டிருக்கையில் டெல்லி மாநிலத்தின் சட்ட சபையும் வித்வான்சபை என மாற்றப்பட்டு விட்டது என்று தாங்கள் அறிவித்திருப்பதில் ஆச்சர்யமில்லையல்லவா?

மாதிரி சோஷலிஸம் அமுலாக்கப்படுவதற்கு இதுபோன்ற காரியங்கள்தானே மிக முக்கியம்!

அன்புள்ள
கூத்தரசன்

சமால்பூர் (ஆமதாபாத்)

20—3—55 அன்று மாலை 5 மணிக்கு சமால்பூர் கழக இல்லத்தில் உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. கீழ்கண்ட புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

டி. பி. பாலகிருட்டிணன் செயலாளராகவும், ப. பாண்டியன் துணைச்செயலாளராகவும், நா. கிருட்டினன் பொருளாளராகவும். தில்லை கோவிந்தன், ஆர். டி. சலம். ப. ஆதிமூலம், பொ. இரத்தினவேலன் ஆகியோர் நரக்குழு பிரதிநிதிகளாகவும், த. செயபாலு. டி. வி. சுப்புராயன். எஸ். நடராசன், நா. சரவணன், எஸ். பச்சையப்பன் எ. சுப்பிரமணியன், டி. ஆறுமுகம் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும். தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஐந்தாண்டு திட்டத்தைக் கண்டித்து தீர்மானம் நிறைவேறிய பின், ஆர். டி. சலம் முடிவுரை கூற கூட்டம் முடிவுற்றது.

சிறுகதை

இன்பக் கனவு

நா. புகழேந்தி

1

பட்டாளத்தில் சேர்ந்த பிறகு முதன் முதலாக வீடு திரும்பிய பரமசிவத்தைப்பற்றி அவன் தந்தை ஒரேயடியாகப் புகழ்ந்து பேசிக்கொண்டிருந்தார். அணுகுண்டு என்றால் எப்படி இருக்கும் என்பதையே அறியாத கிராம மக்கள் அதை ஆர்வத்தோடு கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஏரோப்பிளேன் பறந்ததாம், அதை எதிரிகள் ஏறி வந்தாராம், என் மகன் துப்பாக்கியை தூக்கி சுட்டானாம்! சுட்டுக் குருவிபோல தொப்பென்று விழுந்து தீப்பிடித்து எரிந்ததாம் என்று அவர் கூறும்போது கேட்டுக் கொண்டிருந்தவர்கள் அதை உண்மையாகவே நம்பி பரமசிவத்தின் திறத்தைப் பாராட்டினார்கள். பஞ்சபாண்டவர்களின் கதையைப் படிக்க கேட்ட நினைவு அவர்களுக்கு வரவே மீண்டும் பஞ்சபாண்டவர்களின் பாரதப் போர் நடந்தது போலவும் அதில் பரமசிவன் அர்ச்சுனனாக வந்து அம்பு தொடுத்தது போலவும் எண்ணி வாயை பிளந்தபடி கேட்டுக் கொண்டிருந்தவர்களில் வண்டிக்கார வடிவேலும் ஒருவர்.

பள்ளிக்கூடத்து படிகளில் ஏறிஇறங்காத பரமசிவம் பரங்கியர்கள் பேசும் ஆங்கிலத்தைப் படித்திருக்கிறான், பேசுகிறான். கட்டைவண்டி ஓட்டத் தெரியாமல் திண்டாடியவன் கார் ஓட்டுகிறான். கத்தியைப் பிடிக்க நடுங்கிய கைகள் துப்பாக்கியைப் பிடித்து எதிரியை சுட்டுத்தள்ளியது. இருட்டென்றால் வீட்டைவிட்டு வெளியே போகப் பயந்த அவன் கால்கள் எதிரிகளைத் தேடி காடுமலைகள் எங்கும் அலைந்தனவாம். கம்பங் கொல்லையைக் காவல் காக்கும்போது கால்படி தானியத்தைக் கூட வீட்டுக்குக் கொண்டுவராமல் காரச்சேவுகள் வாங்கி தின்று கொண்டிருந்தவன் இப்போது ஆயிரம் ரூபாயோடு வந்திருக்கிறான், பரமசிவம் பிழைக்கக் கற்றுக்கொண்டு வல்லவனாகி விட்டான்; என்று பெருமையாகப் பேசி பாறைபோல உறுதியாக இருந்த வடிவேலுவின் மனதில் சிறு ஆசைக்கீறலை ஏற்படுத்தி விட்டார் பரமசிவத்தின் தந்தை.

வடிவேலு வாழ்க்கையில் வண்டிக்காரராக இருந்தாரே யொழிய அவர் வாழ்வெல்லாம் வயல்களைச் சுற்றிக்கிடந்தது. ஏதோ உழைத்தோம் பிழைத்தோம் என்று சொல்லி அடுத்துக் கொள்ள இடமில்லாமல் எப்போதும் சோறுபோட எங்கப்பன் வயலுக்கு என்று பெருமையோடு பேசிக் களிப்படைய அவர் தந்தை அவருக்காக வாழ்க்கைக்குப் போதுமான வயல்களை வாங்கி வைத்திருந்தார். அதில் வரும் வருமானத்தைக் கொண்டு வயிற்றுப் பசியை தீர்த்துக் கொண்டு பொழுது போக்குக்காக வண்டி அடித்து வருமானம் தேடிக் கொண்டிருந்தார். வடிவேலுவின் ஒரே திருமகள்தான் செல்வி. மூக்கும் முழியுமாக எடுப்பும்கொண்ட இளந் தளிர் மேனியாளாக விளங்கினாள். முல்லை மொட்டு போன்ற பற்களும், வெள்ளரிப்பழம் போன்ற நிறமுடைய கன்னங்களும் அவள் அழகுக்கு அழகு செய்தன. செல்வியை தன் தங்கை மகன் சென்னியப்பனுக்கு மணம் முடித்துக் கொடுத்து வீட்டோடு வைத்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் வடிவேலுவின் எண்ணம். ஆனால் இப்போதோ...? பரமசிவத்தைப் பார்த்த பிறகு—அவன் நடைஉடைகளைக் கவனித்த பிறகு அவன் வீராதி வீரத்தனத்தைக் கேள்விப்பட்ட பிறகு அந்த எண்ணம் திசை மாறிவிட்டது. எப்படியாவது பரமசிவத்தையும் செல்வியையும் பெண்ணும் மாப்பிள்ளையுமாக மணமாலையோடு காணவேண்டும் என்ற ஆசை பிறந்தது.

2

அக்கா...அக்கா...என்று கூப்பிட்டுக் கொண்டே மான்குட்டியைப் போல செல்வியைத்தேடி துள்ளி ஓடிவந்தாள் பரமசிவனின் தங்கை கண்ணம்மா. என் கண்ணு என்ன விசேஷம்! அத்தான் ஆற்றுக்கு வரச் சொன்னாரா என்று ஆசையோடு கேட்டாள் செல்வி அக்கா என் அண்ணு பட்டாளத்திலிருந்து திரும்பிவந்திருக்கிறார். எனக்கு பம்பாயிலே யிருந்து ஒரு பட்டுச் சேலையும் பட்டு ரவிக்கையும் வாங்கி வந்திருக்கிறார். இன்னெரு பட்டுச் சேலையும் பட்டு ரவிக்கையும் வீட்டில் இருக்கிறது. எங்கப்பாவும் உங்கப்பாவும் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டேன், அது உனக்குத்தான் கிடைக்கும் என்று சிரித்தபடி கூறினாள் கண்ணம்மா. எங்கப்பா அந்தப்பட்டை விலைக்கு வாங்கி விட்டாரா என்று ஆசை ததும்ப முகம் மலரக் கேட்டாள் செல்வி. இல்லையக்கா ...எங்கண்ணு உன்னை விலைக்கு வாங்கப் போகிறார் என்று சொல்லி மீண்டும் உதடுகளை விரித்துச்சிரித்தாள் கண்ணம்மா செல்விக்கு கோபம் வந்துவிட்டது. என்னடி விளையாடுகிறாய்...விஷயத்தை சொல்...என்று வெடுக்கென முகத்தை சுளித்துக் கேட்டாள். எங்கப்பாவும் உங்கப்பாவும் நேற்று பேசிக்கொண்டிருந்தார்கள்.

என்ன பேசிக் கொண்டிருந்தார்கள்?

உன்னை எங்கண்ணுவுக்குக் கட்டப் போகிறார்களாம்!

யார் அப்படிச் சொன்னது?

எல்லாம் உங்க அப்பாதான். எங்க அண்ணுகூட சம்மதிச்சாச்சு.

அதற்குமேல் எதையும் கேட்க செல்வியின் இதயம் விரும்பவில்லை. தலையைக் கையால் தாங்கிப் பிடித்துக் கொண்டே தலை வலிக்கிறது என்று கூறி அவ்விடத்தைவிட்டுப் போய்விட்டாள்.

நிலவும் வானமுமாக ஒன்றுக வாழ்ந்தவர்கள் செல்வியும் சென்னியப்பனும் அவளுக்கு—அவன்; அவனுக்கு—அவள் என்ற மனப்பான்மை இரு குடும்பங்களிலும் இருந்தது. செல்வி நீ தான் என் மனதுக்குகாதலவ்வி என்ற எண்ணம் அவனுக்கும்; அத்தானைக் காண்பேன் அவர் தோளில் தொத்தும் கிளியாவேன் என்ற ஆசை அவளுக்கும் இருந்தது. வளர்ந்தது—வாழ்ந்தது. இது கண்ணம்மாவுக்குப் பிடிக்கவில்லை. அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளவும் இல்லை. வயற்காட்டிலும், ஆற்றிலும் செல்வியும் சென்னியப்பனும் சேர்ந்து செய்யும் சேட்டைகளை—இளமை விளையாட்டுகளை செல்வியின் தோழி என்ற உரிமையில் பார்க்கும் வாய்ப்புகள் பல கண்ணம்மாவுக்குக் கிடைத்தன. அவர்கள் செய்யும் சேட்டையிலும் இளமை விளையாட்டிலும் கண்ணம்மாவின் உள்ளம் பதிந்தது. உணர்ச்சி ஒன்றியது. அதற்கு ஒத்து ஊதுவதுபோல சென்னியப்பன் கட்டுடல் காட்சி யளித்தது. பொறுமையின் உருவமாக மாறினள் கண்ணம்மா.

சென்னியப்பனின் திரண்ட தோள்கள் தனக்குக் கிட்டுமா! அவனின் அரும்பு மீசையைத் தாங்கி நிற்கும் அதரம் தன்னுடைய அதரத்தோடு பொருந்துமா...உணர்ச்சியைத் தூண்டி உள்ளத்துக்கு இதமளிக்கும் அவன் பஞ்சுக் கரங்கள் தன்னுடலை இறுக அணைத்து இன்பந்தருமா! என்றெல்லாம் எண்ணி எண்ணி ஏமாந்து கிடந்தாள் கண்ணம்மா. இதை செல்வியும் சென்னியப்பனும் உணரவில்லை. தன் தோழிதானே என்ற நினைப்பு செல்விக்கு. இதையெல்லாம் தவருகக் கருதமாட்டாள் என்ற நினைப்பு சென்னியப்பனுக்கு. உலையிலே யே கிடந்து நாளுக்கு நாள் உருமாறி வரும் இரும்புபோல அவள் உள்ளம் மாறிவருவது இருவருக்கும் தெரியாது. நீறுபூத்த நெருப்பின் உண்மைத் தோற்றத்தை எளிதில் கண்டுபிடிக்க முடியாதல்லவா!

3

செல்விக்கும் பரமசிவத்துக்கும் திருமணம் உறுதியானது. சென்னியப்பன் ஜாதகமும் செல்வியின் ஜாதகமும் பொருந்தவில்லை. என்ற காரணத்தைக் காட்டி செல்விக்கு அறிவுரை கூறினர் வடிவேலு. பரமசிவம் பட்டாளத்துக்குப் போய் வந்தவன் பணமும் நிறைய வைத்திருக்கிறான். ஆளும் அழகன். சென்னியப்பனிடம் பணம் ஏது! அழகு ஏது! ஏதோ தார்க்கோலைப் பிடித்துக் காலத்தை ஓட்டுகிறான். பரமசிவத்தைப் போல நாகரீகம் தெரிந்தவனல்ல படியாதவன். அனுபவமில்லாதவன் என்று எவ்வளவோ எடுத்துக் கூறியும் அவள் அழுகையை நிறுத்த முடியவில்லை வடிவேலுவால். அந்த நேரத்தில் கண்ணம்மாள் வந்தாள். வடிவேலு வெளியே போய்விட்டார். களங்கமில்லாத மனதோடு சுமக்க முடியாத பாரத்தை இறக்குவதுபோல கண்ணம்மாவிடம் தன் எண்ணத்தை எல்லாம் அப்படியே சொல்லி விட்டாள் செல்வி. கண்ணு இந்தத் திருமணத்துக்கு என்மனம் இடந்தரவில்லை. எப்படியாவது இதை மாற்ற வேண்டும். அவசியம் இன்று இரவில் களத்துமேட்டுக் காளி வீட்டுக்கு அத்தானை வரச் சொல்ல வேண்டும் என்றாள் செல்வி. அப்படியே சொல்வதாகக் கூறினாள் கண்ணம்மா.

பழம் நழுவிப் பாலில் விழுந்தால் எப்படி இருக்கும். இந்தச் சந்தர்ப்பத்தைக் கைவிட்டால் காரியம் எல்லாமே பாழாகிவிடும். செல்விக்கும் சென்னியப்பனுக்கும் இடையே பகையென்னும் சுவரை வளர்த்தால்தான் செல்வி நம் வீட்டு மல்லிகை ஆவாள் சென்னியப்பனின் திரண்ட தோள் தனக்குக் கிடைக்கும் என்ற வஞ்சக எண்ணம் கண்ணம்மாவின் உள்ளத்தில் முளைத்தெழுந்து வளர்ந்தது.

வயலிலே வேலை பார்த்துக் கொண்டிருந்த சென்னியப்பன் முகம் வாட்டமுற்றிருந்தது. அத்தான் என்ற குரல் கேட்டதும் நிமிர்ந்து பார்த்தான், அங்கு நின்றது செல்வியல்ல, கண்ணம்மா. என்ன கண்ணு...அந்த மூதேவி ஏதாச்சும் சொல்லியனுப்பினளா? என்றான் ஆத்திரத்தோடு. அவளாவது சொல்லி அனுப்புகிறதாவது ... எங்கண்ணுவுக்கு வாக்கப்படப்போகிற பெருமையில் உன்னையே மறந்துவிட்டாள். தாலி கழுத்தில் ஏறுவதற்கு முன்பே எங்கண்ணுவைத் தனியாகச் சந்தித்துப் பேசப் போகிறாளாம், இன்று இரவு செல்வியும் எங்கண்ணுவும் களத்து மேட்டில் காளி வீட்டில் கூடிக்குலாவப் போகிறார்கள். இதை எங்கண்ணுவிடம் சொல்லச் சொன்னாள் போகிறேன், என்று கூறி விட்டுப் போய்விட்டாள் கண்ணம்மா!

4

களத்து மேட்டுக் காளி வீடு என்றதும் சென்னியப்பன் கண்கள் செந்தீ போலச் சிவந்து அனல் வீசியது. ஊருக்கு அப்பால் ஒதுக்குப்புறத்தில் இருக்கும் அந்த வீடு பேய்பிடித்த வீடு என்று ஊராரால் ஒதுக்கப்பட்டிருந்தது. அதற்குள் யாருமே துணிந்து போகமாட்டார்கள் ஆனல் செல்விக்கும் சென்னியப்பனுக்கும் அந்த வீடுதான் இன்பவீடு! யாருக்கும் தெரியாமல் இதுவோடு இரவாய் சந்திப்பதும் இளமைக் கனவுகளை எல்லாம் நனவாக்குவதும் கன்னங் குழையச் சிரிப்பதும் அதரங்கள் அலுக்கும்வரை முத்தமழை பெய்வதும் அங்கேதான். ஒருமுறையா இருமுறையா? எத்தனையோ முறைகள் எண்ணிப் பார்த்தான். அவன் இதயம் வேகமாக அடித்துக் கொண்டது. இரவு வரட்டும்...விழிகள் இரண்டையும் கூர்மையாக்கிப் பார்க்கிறேன் என்றான் ஆத்திரத்தோடு. வயலில் அவன் கால்கள் பதியவில்லை, வேகமாக வெளியேறினான்.

இரவு வந்தது! பெட்டி நிறையப் பணத்தை பூட்டி வைத்துக் கொண்டு அய்யாபிச்சை என்று கையேந்தி நிற்கும் குச்சி உடலுக்கு ஒரு தம்பிடி கூடக் கொடுக்காத கல்நெஞ்சக்காரனின் உள்ளத்தைப்போல் இருள் கவிந்திருந்தது. எங்கும் ஒரே அமைதி! அடிமேல் அடி வைத்து அக்கம்பக்கம் பார்த்துக் கொண்டே சென்ற உருவத்தை பின் தொடர்ந்து மறைந்து மறைந்து சென்றான் சென்னியப்பன். அவன் இதயத்தை யாரோ பிடுங்கிக்கொண்டு போவது போல் இருந்தது. கையில் ஏதோ ஒரு உணர்ச்சி தேளின் விஷத்தைப் போல ஓடிக்கொண்டிருந்தது. களத்து மேட்டுக் காளிவீடு வந்தது; அதனுள் அந்த உருவம் நுழைந்தது. அதைத் தொடர்ந்து சென்னியப்பனும் பக்கத்தில் நெருங்கிவிட்டான், கதவு சாத்தப்பட்டது. அத்தான்! ஆர்வத்தோடு எழுந்த அந்த வார்த்தையை கேட்டதும் அவன் உள்ளத்திலே அனல் கொட்டுவதுபோல் உணர்ந்தான். அவனுக்கு வெறி கிளம்பிவிட்டது. சண்டாளி... துரோகி...என்னை ஏமாற்றி விட்டுப்பட்டாளத்தானேடு பகட்டாக வாழ்வா! பீடிபிடிப்பதற்காக வைத்திருந்த நெருப்புப் பெட்டியை எடுத்து உராசினான்., காற்றேடு முத்தமிட்டுக் கொண்டிருந்த கூரை மீது வீசிவிட்டு வேகமாக நடந்தான்.

செல்வி இன்னும் நாலைந்து தினங்களில் என் மனைவியாகி விடுவாள். காட்டு ரோஜா என் வீட்டை அலங்கரிக்கும் அதனைக் கண்டு என் உள்ளம் பூரிக்கும் என்று இன்பக்கனவு கண்டுகொண்டிருந்த பரமசிவன், கனவு கலைந்தது. திடுக்கிட்டெழுந்தான். வெளியே தீ தீ என்ற பெரிய இரைச்சல் கேட்டது. ஓடினான் சத்தம் வந்த பக்கமாக, களத்து மேட்டுக் காளி வீடு எரிந்து கொண்டிருந்தது. ஊர் மக்கள் திரண்டு நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். வீட்டுக்குள்ளிருந்து ஒரு பெண்ணின் அபாயக் குரல் அடிக்கடி எழுந்தது. பேய் என்றனர் சிலர். காளி தான் என்றனர் சிலர், பரமசிவம் ஓடிப் போய் கதவை உடைத்தான்; உள்ளே நுழைந்தான். அவனைப் பின்பற்றி ஒரு வாலிபர்கள் கூட்டம் உள்ளே நுழைந்தது. பெரிய கஷ்டத்தின் பேரில் தீ நாக்குகளால் தாக்குண்ட இரண்டு பெண் உருவங்களை வெளியே கொண்டு வந்து கிடத்தினர்கள்.

அந்த உருவங்கள் யார் தெரியுமா...? இன்பக் கனவுகள் கண்டு அத்தானின் தோளில் தொத்தும் கிளியாகி விடுதலை பெற நினைத்த செல்வியும் ஆசைக் கனவின் தூண்டுதலுக்களாகி வஞ்சக எண்ணத்தால் சென்னியப்பனின் நெஞ்சத்தில் இடம்பெற நினைத்து பட்டாளத்தான் உடையில் மறைந்திருந்த கண்ணம்மாளுந்தான்.

"திராவிடன்" சந்தா விவரம்

ஆண்டு சந்தா ...	ரூ. 8	0	0
ஆறுமாதம் ...	ரூ. 4	0	0
தனிப்பிரதி ...	ரூ. 0	3	0

வெளிநாடு

ஆண்டு சந்தா ...	ரூ. 9	0	0
ஆறு மாதம் ..	ரூ. 4	8	0
தனிப்பிரதி ...	ரூ. 0	3	6

நாடு என்றால் என்ன?

எம். எஸ். ராமசாமி

9

மனு நம்பிக்கை

மனு நம்பிக்கை என்பது, பரம்பரை, பரம்பரையாக நிலைத்துப் பதிந்து கிடக்கும் பழக்க வழக்கக் கொள்கைகளேயாகும்,

ஒருநாட்டு மக்களினால் இழிவாகக் கருதப்படுகிற ஒரு வழக்கத்தை, இன்னொரு நாட்டார் சிறந்ததாகவோ, காரணமில்லாமலோ கைக் கொண்டிருப்பதைத்தான் 'மனு நம்பிக்கை' என்று, அரசியல் வாதிகள் கூறுகிறார்கள்!

அப்படி ஏதாவது ஒரு நம்பிக்கையைக் கொண்ட மக்கள், ஓரிடத்தில் கூட்டமாக வாழும் வசதி இருக்கும் வரை அதைக் கைவிட மாட்டார்கள், கைவிடச் செய்யவும் முடியாது.

அந்த நம்பிக்கைகளுக்குக் காரணம் காட்டவோ, விவரித்துச் சொல்லி சரி தவறு கூறவோ முடியாது—அனுமதிக்க மாட்டார்கள். அவைகளை உதாரணங்களின் மூலம் எடுத்துக் காட்டுவோம்.

ஐரோப்பாவில் பெரும்பாலோர் மலங் கழித்தால் தண்ணீரைக் கொண்டு ஆசன சுத்தி செய்வதில்லை. பஞ்சினாலோ, துணியினாலோ துடைத்து விடுகின்றனர்.

இத்தகைய ஐரோப்பியர்கள் உணவைக் கையால் அள்ளி உண்பதை அசுத்தம் என்று கருதுகிறார்கள்—கரண்டியால் எடுத்து உண்கிறார்கள்!

திராவிடன் மலங் கழித்தால் தண்ணீரால் ஆசன சுத்தம் செய்வான். அப்படிச் சுத்தம் செய்வதற்கு ஏதாவது அசந்தர்ப்பத்தால் சிறிது தாமதமானாலும் அமைதியிழந்து வருந்துவான்! உணவை கையால் அள்ளி உண்பான்! அதை அசுத்தமென்று கருதமாட்டான்.

இந்திய முஸ்லீம்களில் பெரும்பாலோர் சிற்றப்பன் மகளையும், பெரியப்பன் மகளையும் முறைப் பெண்ணாகத் திருமணம் செய்து கொள்ளுகிறார்கள்.

வட இந்தியர்களுக்கும் தென்னிந்தியர்களுக்கும் மணப்பெண் நிச்சயம் செய்வதில் சில வித்தியாசங்கள் உள்ளன.

வட இந்தியர்கள் தாய்வழி வந்த அண்ணன் மகளைத் திருமணம் செய்து கொள்கிறார்கள். கன்னோஜ் மன்னன் ஜெயசந்திரன் என்பவனுடைய மகள் சம்யுக்தை, பிருதிவி ராஜனைக் காதலித்து சுயம்வர மண்டபத்தில் அவனுடைய உருவச் சிலைக்கு மணமாலை சூட்டினாள் என்கிற வடஇந்திய சரித்திரத்தை எல்லோரும் அறிவர். ஜெயசந்திரனும், பிருதிவி ராஜனும் சிறிய தாயார் பெரிய தாயார் மக்கள்—சகோதர முறை உள்ளவர்கள்! அப்படி இருந்தும் சம்யுக்தையை பிரிதிவிராஜன் சிறை பிடித்துப் போய்த் திருமணம் செய்து கொண்டான்.

திராவிடர்களின் மணப்பெண் முறை இவற்றிற் கெல்லாம் மாறுபட்டதாகும். பெரும்பாலோர் அத்தை மகளையும் சிறுபான்மை அக்காள் மகளையும் திருமணம் செய்கிறார்கள்.

வட இந்தியாவில் வைதீகனல்லாத—சாதாரண இந்துவுங்கூட முஸ்லீம்களுடன் உட்கார்ந்து உணவு அருந்த சம்மதிக்க மாட்டான்.

இதைப்பற்றி திரு. இராசேந்திர பிரசாத் கூறுகிறார் வருமாறு:

"சந்தேகமில்லாமல் இந்துக்கள் முசல்மான்களோடு உடனமர்ந்து உண்ண எப்பொழுதும் மறுத்து வந்திருக்கிறார்கள். இன்றுவரை இந்தத் தடை இந்து முஸ்லீம்களுக்கு இடையில் மட்டும் தான் இருந்து வருகிறதென்று சொல்வதற்கில்லை. இந்து சாதிகளில் பெரும் பிரிவுக்குள்ளும், உட்பிரிவுக்குள்ளும் இருந்து தான் வருகிறது"

வட இந்தியாவில் இந்துக்களுக்குள்ளேயே ஒருவர்க்கொருவர் கிட்ட இருந்து சாப்பிடமாட்டார்களாம்! இது, அங்கு புதுமையல்ல. என்று திரு. இராசேந்திரர் "இந்தியா பிரிக்கப்பட்டால்" என்ற நூலில் கூறுகிறார்!

தென்னிந்தியாவில் எவ்வளவு வைதீக இந்துவாக இருப்பினும், இன்னொரு சாதியானோ, இன்னொரு மதத்தானோ பக்கத்தில் உட்கார்ந்து உணவருந்துவதை வெறுக்க மாட்டான்—மறுக்க மாட்டான்! ஆனால் இது தென்னாட்டுப் பார்ப்பனருக்கு பொருந்தாது.

வடக்கே நவகாளிப் படுகொலை நடந்த போது தெற்கே அமைதி நிலவி இருந்ததும், வடஇந்தியாவிலும் பாகிஸ்தானிலும் 'அகதிகள் பரிவர்த்தனை' செய்த போது தென்னிந்திய முஸ்லீம் ஒருவர்கூடஅகதியாக்கப்படாததுமே நமது மனப்பான்மைக்குப் போதிய சான்றாகும்.

வடஇந்தியாவில், பெண்களும், ஆண்களும், அவர்களுடைய சுற்றத்தார்களோ, நண்பர்களோ, வரும்போது ஆண் பெண் வேற்றுமை பாராட்டாமல் மார்போடு மார் பழுந்த கட்டித்தழுவிக் கொண்டு வரவேற்பார்கள்!

தென்னிந்தியாவில் அண்ணன் தம்பி முறையுள்ளவர்கள்கூட பெண்களைக்கட்டித் தழுவ மாட்டார்கள். அயல் வீட்டுப் பெண்களைத் தொடுவதுகூட இங்கு ஒழுக்கக் கேடாகக் கருதப்படும்.

பண்டித ஜவகர்லால்நேருவைக் காணச் சென்ற அவருடைய நண்பர்களின் மனைவிமார் பலர் நேருவால் கட்டித் தழுவி வரவேற்கப்பட்ட ஈனக்காட்சிகள், நிழற்படமாக எடுக்கப்பட்டு பத்திரிக்கைகளில் வந்துள்ளன. பண்டித விசயலட்சுமி அம்மையாரின் புதல்விகளான இளங்குமரிகள் இருவர், இலங்கை முதன் மந்திரி கொத்தலாவலையுடன் குடித்துவிட்டு; ஆங்கிலேய முறையில் கூத்தாடி விட்டு வந்த மானங்கெட்ட செய்தியும், விசயலட்சுமி அம்மையாரே அந்நியர் பலருடன் கட்டித்தழுவி நிற்கும் நிழற்படக் காட்சிகளும், இதற்குப் போதிய சான்றுகளாகும்.

பெண்கள், அந்நிய ஆடவரைக் கட்டித் தழுவும் செயலை. ஒரு சாதாரணச் செயலாகக் கருதுகிற மனப்பான்மை திராவிட நாட்டில் ஆணோ பெண்ணோ கனவில்கூட கற்பனை செய்ய இயலாதது.

திராவிடப் பெண்கள் இத்தகைய இழி செயலுக்கு ஒருக்காலும் உடன்படமாட்டார்கள்.

"எஞ்ஞான்றும் எம்கணவர்
எம்தோள்மேல் சேர்ந்தெழினும்
அஞ்ஞான்று கண்டேம்போல்
நாணுதும் ஆல்—எஞ்ஞான்றும்
என்னைக் கெழீஇனர் கொல்லோ?
பொருள் நசையால்
பன்மார்பு சேர்ந்தொழுகு வார்"

என்று பலர் மார்பில் பொருந்தும் பரத்தமையைக் கண்டிக்கிறது. நாலடியார் என்னும் தமிழ் நீதி நூல். வட இந்தியாவின் நிலைமையோ இதற்கு நேர்மாறாக இருக்கிறது.

1954 ஜூன்மாதம் முற்பகுதியில் அடியிற் கண்ட செய்தி பத்திரிகைளில் வந்திருந்தது.

"ஜோத்பூரில் அம்மைநோயைத் தடுப்பதற்காக இரவு 12-மணிக்கு சுமார் 50 இளம் பெண்கள் நிர்வாணக் கோலத்துடன் கையில் வாள், தடி, உலக்கை முதலிய ஆயுதங்கள் ஏந்தி, நகரிலிருந்து 3 மைல் தூரத்திற்கு அப்பாலிருக்கும் மயானத்திற்குச் சென்று குங்குமம், சந்தனம் முதலியன கொண்டுபோய் எமதேவதைக்குப் பூசை செய்து விட்டுத் திரும்பினார்கள்.

இத்தகைய செய்திகளைக் காணும் போது வடஇந்தியாவில், ஆண்களும் பெண்களும் அழுக்குக்குத்தான், உடை உடுத்துகிறார்களோ என்கிற சந்தேகம் தோன்றுகிறது நமக்கு!

கணவன் இறந்துபோனால் உடன் கட்டை ஏறும் பழக்கம் வடக்கே இன்னும் இருந்து வருகிறது. திரு. இராஜாராம் போன்றவர்களின் நன் முயற்சியால் லார்டு பெண்டிங் பிரபு காலத்திலேயே (1829) சட்டபூர்வமாகத் தடுக்கப்பட்டிருந்தும், இன்னும் உடன்கட்டை ஏறுகிறார்கள் என்றால் காரணம் என்ன?

அங்குள்ள மதவாதிகள் உடன்கட்டை ஏறுவோரைப் பெருமைப் படுத்திப் பேசுவதும், அதை நம்புகின்ற சாதாரண மக்கள், உடன்கட்டை ஏறாதவர்களை மானக்கேடாக ஏசுவதும் வடஇந்தியக் கிராமங்களில் நடைமுறையில் மன நம்பிக்கைப் பண்பில் இருக்கிறது என்பதைத் தவிர என்ன காரணம் இருக்க முடியும்?

கணவனை இழந்த கைம்பெண்கள் உடன் கட்டை ஏறும் அளவுக்குத் துணியவில்லை என்றாலும், கணவன் இறந்த சிறிது நாட்களுக்கு உள்ளாகவே, எப்படியாவது உயிரை மாய்த்துக் கொள்ளும் தற்கொலைச் செயல் அங்கே வழக்கத்தில் இருப்பதாகத் தெரிகிறது.

அடிக்கடி உடன்கட்டை ஏறிய செய்திகள்—அதிகாரிகளின் ஆதரவுடன் உடன் கட்டை ஏறிய செய்திகள் பத்திரிகைகளில் வருகின்றன. பத்திரிகைகளுக்கு எட்டாத செய்திகள் எத்தனையோ!

பண்டை நாட்களில், தமிழகத்தில் உடன்கட்டை ஏறும் வழக்கம் இருந்ததாகப் புறநானூற்றின் மூலம் அறிகிறோம். ஆனால் அதே புறநானூற்றில் உடன் கட்டை ஏறுவோரை சான்றோர்கள் தடுத்ததும், அதனை மீறியதும் காணப்படுவதால், இங்கு உடன் கட்டை ஏறுவது நிர்ப்பந்தம் காரணமாக இல்லாமல், அளவிட முடியாத காதல் காரணம் என்றும் அறிகிறோம்.

பல்சான் றீரே! பல்சான் றீரே!
செல்கெனச் சொல்லாது ஒழிகென விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான் றீரே!
அணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந்து
இட்ட
காழ்போல் நல்விளர் நறுநெய் தீண்டாது
அடைஇடைக் கிடந்த கைபிழி பிண்டம்
வெள்எட் சாந்தொடு புளிபெய்து அட்ட
வேளை வெந்தை வல்சியாகப்
பரல்பெய் பள்ளிப் பாயின்றி வதியும்
உயவல் பெண்டிரேம் அல்லேம் மாதோ
பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட்டு
[ஈமம்
நுமக்கரிது ஆகுகதில்ல எமக்கு எம்
பெருந்தோட் கணவன் மாய்ந்தென
[அரும்பு அற

ஆரம்பக் கல்வி சீர்திருத்தம்

திராவிடப்பித்தன்

8

அக்காலத்தில் கல்வி பயிற்றுவிப்பார் ஆசிரியர், கணக்காயர், பாலாசிரியர், இளம்பாலாசிரியர் என்றெல்லாம் அழைக்கப்பட்டனர். மதுரை கணக்காயனுர் என்னும் புலவர் மாணவர்கட்கு கல்வி பயிற்றுவிக்கும் ஆசிரியராக இருந்து வந்தார் என்னும் வரலாறு இதைத் தெரிவிக்கும். கணக்காயர் என்பார் கணிதத்திலும் வல்ல ஆசிரியராக இருந்து வந்தனர். கல்வி கற்பிக்கும் ஆசிரியரான கணக்காயனுர் ஒவ்வொரு ஊரிலும் இன்றியமையாதவராகக் கருதப்பட்டார். கணக்காயர் இல்லாத ஊர் என்னதான் உயர்ந்த ஊராக இருந்தாலும் பயனற்ற ஊராகவே கருதப்பட்டு வந்தது.

கணக்காயர் இல்லாத ஊரும் [பிணக்கறுக்கு
மூத்தோரை யில்லா அவைக்களனும் [—பாத்துண்ணு
தன்மையி லாள ரயலிருப்பும் இம் [மூன்றும்
நன்மை பயத்த லில (—திரிகடுகம் 10)

எனவரும் திரிகடுகப் பாட்டினுல் இவ்வுண்மையைத் தெரிந்து கொள்ளலாம்.

கல்வி கற்பிக்கும் ஆசான் கணக்காயர் என்று மட்டும் அழைக்கப்படவில்லை. ஆசிரியர் என்றும் அழைக்கப்பட்டார். உயர்தரக் கல்வி கற்பிப்போர் ஆசிரியர் என்று வழங்கப்பட்டு வந்தனர். ஆசிரியர் தொல்காப்பியனுர், கடலாசிரியர் நல்லந்துவனுர், ஒருங்கலை மணவூராசிரியர், மூசிறியாசிரியர் நீலகண்டனுர், செல்லூராசிரியர் முண்டம் பெருங்குமரர், அசைவிரி குன்றத்தாசிரியர் என்றெல்லாம் சங்க காலத்தில் பெரும் நூற்புலமையும் மொழிப்புலமையும் ஒருங்கே படைத்திருந்த உண்மையை ஓர்க. இவ்வாசிரியர்கள் மாணவ ஆசிரியர்களாக மட்டுமில்லாது அரும்பெரும் இலக்கிய இலக்கணங்களையும் இயற்றி தமிழ் வளர்த்தனர் தமிழ் மக்களுக்கு அறிவு கொளுத்தினர்.

மொழி நூலாசிரியர்களாக மட்டுமின்றி பற்பல கலைகளிலும் வல்ல கலையாசிரியர்களாகவும் திகழ்ந்தனர் அக்கால ஆசிரியர்கள் என்னும் உண்மையையும் சங்க கால இலக்கியங்கள் தெரிவிக்கின்றன. சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையில் அதன் ஆசிரியரான இளங்கோவடிகள் கலைவல்ல ஆசிரியர்கள் பலரைக் குறிப்பிடுகின்றனர். ஆடலாசிரியர், இயலாசிரியர், இசையாசிரியர், குழலாசிரியர், யாழாசிரியர், சிற்பநூலாசிரியர், கட்டுரையாசிரியர் என்றெல்லாம் பலவாசிரியர்கள் கூறப்படுகின்றனர். இதுமட்டுமின்றி பூகநூல் ஆசிரியர், நிலநூல் ஆசிரியர், வான்நூல் ஆசிரியர் என்றெல்லாம் இருந்து வந்துள்ள எண்மைகளும் சங்ககால பாட்டுகளினுல் தெரிய வருகின்றன. இப்படியாக உயர்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் அக்காலத்து மிகப்பலராக இருந்து வந்த உண்மையினுல் பண்டைக் காலத்திய உயர்தரக் கல்வியின் சிறப்பினை ஒருவாறு அறியலாம்.

சிறுர்கட்கு எண்ணும் எழுத்தும் கற்பிக்கும் துவக்கக் கல்வி ஆசிரியர்களும் இருந்தனர் என்னும் உண்மை குறிப்பிடத்தக்கதாகும். அகநானூறு குறுந்தொகை ஆகியவைகளில் பாலாசிரியர் என்றும் இளம்பாலாசிரியர் என்றும் புலவர் சிலா குறிப்பிடப்பட்டுள்ளனர். இளம் பாலகர்களாகிய சிறுவர்கட்கு ஆரம்பக்கல்வியை புகட்டும் காரணம் பற்றியே இவர்கள் பாலாசிரியர்கள் என்றும் இளம்பாலாசிரியர்களென்றும் வழங்கப்பட்டனர் எனக் கொள்ளுதல் சிறப்புடையதேயாகும். மதுரைபாலாசிரியர் நப்பாலனுர், மதுரை பாலாசிரியர் நற்றேவனுர் எனவும் மதுரை இளம் பாலாசிரியர் சேந்தன் கூத்தனுர் எனவும் கடைச் சங்கப் புலவர்கட்கு வழங்கும் பெயர்களால் இச்செய்தி தெரியவருதல் காண்க.

மணிமேகலையில் பார்ப்பன உவாத்தியைப் பற்றிக் கூறப்பட்டிருப்பதும் பார்ப்பனர் தம்புதல்வர்களை கல்வி கற்கச் செய்த முறையைப் பற்றிக் கூறப்பட்டிருப்பதும் குறிப்பிடவேண்டியதாகும். வேதம் ஓதும் பார்ப்பனர்கள் உவாத்திமைத் தொழிலேற்று சிறுர்கட்கு கல்வி புகட்டி வந்த வழக்கம் அக்காலத்தில் இருந்துவந்தது என்னும் உண்மையை மணிமேகலை ஆசிரியர் சாத்தனுர் கூறியுள்ளார்.

',வாரணு சியோர் மறையோம் பாளன்
ஆரண உவாத்தி அபஞ்சிகன் என் [போன்''
(—மணிமே—ஆபுத்— திறம்—அறிவித்த காதை 2-3)

என்றும்,

''ஆட்டிசின் றலைக்கும் அந்தண ருவாத் [தியை''
(மேற்படி திறம்வியந்த காதை 46)

என்றும் வந்துள்ளது காண்க. 'காசியம் பதியின் கண்ணுள்ள ஓர் அந்தணனும் மறைகளை ஓதுவிக்கும் உபாத்தியாயனும் ஆகிய அபஞ்சிகன் என்பான்' என்பதும் 'மிகவும் வருந்திக் கொண்டு நின்ற பார்ப்பன உபாத்தியை' என்பதும் மேற்கூறியவற்றிற்கு பொருள்களாகும். உவாத்தி என்பது உபாத்தியாயன் என்பதன் சிதைவு. இஃது உவாத்தியாயன் உவாத்தியான் எனவும் தமிழில் வழங்கும்.

பார்ப்பனர் தம் பிள்ளைகட்கு கல்வி பயிற்றுவித்த வழியைப்பற்றியும் மணிமேகலை ஆசிரியர் கூறுவதும் தெரிய வேண்டிய தொன்றுகும்.

''நம்பி பிறந்தான் பொலிகநங் [கிளையெனத்
தம்பதிப் பெயர்ந்து தமரொடுங் கூடி
மார்பிடை முன்னூல் நன்கனம் நவிற்றி
ஒத்துடை யந்தணர்க் கொப்பவை [யெல்லாம்
நாத்—தொலை வின்றி நன்கனம் [அறிந்தபின்''
(மணிமே—ஆபுத்—திறம் அறிவித்—காதை 21—26)

என மணிமேகலையில் கூறப்படுகின்றது;

இதன் பொருளாவது: மகன் பிறந்தனன். இனி நம் கிளை பொலிவுறுக என்று தம்மூரின்கட் சென்று உறவினருடன் கூடி மார்பின்கண் முந்நூல் அணிதற்கு முன்னரே நாவினுல் மறைகளை நன்கு பயிலச் செய்ய, மறையோதும் அந்தணர்கட்குப் பொருந்துவன அனைத்தையும் சொல்வன்மை குன்றுமல் நன்குணர்ந்தபின்னர் என்பதாகும். நவிற்றுதல் என்பது அடிப்படப் பயில்வித்தல் என்பதாகும். நாத்தொலைவின்றி என்பதற்கு நாவானது தோற்றல் இல்லையாக, பிரிதோர் சொல், வெல்லுஞ் சொல் இன்மை யறிந்து சொல்ல வல்லனுக என்பது பொருளாகும். இதனின்றும் அக்காலத்தின் பெற்றோர் தம் குழந்தைகட்கு அவர்களது சிறுவயதின் போது கல்வி புகட்டிய முறை தெரிய வருது காண்க. —தொடரும்

வள்ளிதழ் அவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையும் தீயும் ஓரற்றே!''
(புறம் 246)

இது, பூதப் பாண்டியன் என்னும் தமிழ் மன்னன் இறந்த போது, உடன் கட்டை ஏறச்சென்ற அவன் மனைவி பெருங்கோப் பெண்டிர் என்பவள். அவளைப் போகவிடாமல் தடுத்த மதுரைப் பேராலவாயார் முதலான புலவர் பெரு மக்களை, பார்த்துப் பாடியதாகும். இதன் பொருள்:-

பலசான்றுேரே! பலசான்றுேரே!! என்னைத் 'தீப்பாயப் போ' என்று சொல்லாமல் 'போகாதே' என்று தடுக்கின்ற பொல்லா சூழ்ச்சியையுடைய சான்றுேரே! அணில் போன்ற வரிகளையுடைய வெள்ளரிக்காயை வாளால் பிளந்து, அதிலுள்ள விதைகளைப் போக்கிய சதைப்பகுதி போன்று, வெண்மையும் நறுமணமும் கொண்ட நெய் சேர்க்காமல்; சிலையின் மேல் பிழிந்து வைத்த சோற்றையும், வெள்ளை எள்ளையும், புளியையும் அரைத்துச் சேர்த்து வேக வைத்த வேளைக் கீரையையும் உணவாக உண்டு பருக்கைக் கற்களைப் பரப்பி, அதனையே பாயாகக் கொண்டு படுத்து கைமை நோன்பிருந்து வருந்துகின்ற கோழைப் பெண்டிர் போல் அல்லேன் நான். பெரிய காட்டில் கருமையான விறகுகளால் அடுக்கி எரிகின்ற பிணப்படுக்கையில் கூடச் சேர்த்து எரிவது உங்களுக்கு அருமையான காரியமாக இருக்கலாம். எனக்கோ, திரண்ட தோள்களையுடைய எனது கணவன் எரிகின்ற நெருப்பாதலால் அரும்பு மலர்ந்த அழகிய தாமரைகள் நிறைந்த பொய்கையும், இந்த நெருப்பும் ஒன்றே என்பதாகும்.

பூதப்பாண்டியனுக்கும், பெருங்கோப் பெண்டிருக்கும் இடையில் வளர்ந்த காதலின் சிறப்புப்பற்றி மதுரைப் பேராலவாயார் என்னும் புலவர் பெரு மகன் கூறுகிறுர்;-

''யானை தந்த முளிமர விறகில்
கானவர் பொத்திய ஞெலிதீ விளக்கத்து
மடமான் பெருநிரை வைகுதுயில் எடுப்பி
மந்தி சீக்கும் அணங்குடை முன்றிலின்
நீர்வார் கூந்தல் இரும்புறம் தாழப்
பேர்அஞர்க் கண்ணள் பெருங்காடு [நோக்கித்
தெருமரும் அம்ம! தானேதன் கொழுநன்
முழவுகண் துயிலா கடியுடை வியன் [நகர்ச்
சிறுநணி தமியள் ஆயினும்
இன்னுயிர் நடுங்கும் தன் இளமை [புறங்கொடுத்தே''
(புறம் 247)

இதன் பொருள்: யானையால் வந்த பட்ட மரவிறகில், வேடர்கள் தீக்கடை கோலால் கடைந்து மூட்டிய தீ வெளிச்சத்தில் இளமை பொருந்திய மான் கூட்டம் உறங்கும் போது, அவற்றை எழுப்பி மந்தி தூக்கும் துயரம் சேர்ந்த ஈமத்தில், நீர்வடிகின்ற தலைமயிர் பிடரியில் வீழ்ந்து கிடக்க மிகவும் துயரம் தோய்ந்த கண்களையுடையவள் தன் கணவன் எரிகின்ற பெருங்காட்டை நோக்கி உயிர் தளர்வாள்! அம்மம்ம! இடைவிடாது முழவு ஒலிக்கின்ற காவல் மிகுந்த நகரத்தில் சிறுபொழுது கணவனைப் பிரிந்து தனித்திருக்க நேர்ந்தாலும், அவளுடைய இளமை புறங்கொடுக்க இன்னுயிர் தளர்வாள் என்பதாம்.

அத்தகையவள் கணவன் இறந்தபோது உடன்கட்டை ஏறுமல் இருக்க மாட்டாள் என்பது கருத்து.

மேலே கண்ட புறப்பாட்டுக்களால் தமிழகத்தில் உடன்கட்டை ஏறுவோர் காதல் மிகுதியாலன்றி — கட்டாயத்தால் அல்ல என்பதை அறியலாம். அத்துடன் அந்தக் காலந்தொட்டு அறிஞர்களால் தீப்பாயும் செயல் தடுக்கப்பட்டிருப்பதும், புலனுகும்.

இக்காலத்தில் தமிழகத்தில் தீப்பாய்ந்து உயிர் விடுபவர் இல்லை யென்றே கூறலாம். எங்காவது இலட்சத்தில் ஒருவர் அப்படித் தீப்பாய விரும்பினுலும் சமூகம் இடந்தராது கடுமையாகத் தடுக்கும்—அறிவுரை கூறும், இது தமிழக நிலை! வடக்கிலோ ஆடம்பரமாக, அதிகாரிகள் ஒத்துழைப்போடு தீப்பாய்கிறுர்கள், என்றுல், அவர்களின் மனப்பான்மை எத்தகையது என்று ஒருவாறு ஊகித்துக் கொள்ளலாம்.

இவ்வாறு, தென்னுட்டு மன நம்பிக்கையும், வடநாட்டு மன நம்பிக்கையும், வேறுபடுவதால், வட இந்தியாவில் மிகப் பெருங் காதல் வாழ்வு நடைபெறுவதாக எண்ணி விடவேண்டாம். ''இது ஒரு மத நம்பிக்கையாக நடைபெறுகிறது; என்றுதான் கூறலாம். சமூக நிர்ப்பந்தங்கள், இளம் பெண்களை அநியாயமாக தற்கொலை செய்யத் தூண்டுகிறதே தவிர வேறு ஒன்றுமில்லை.

ஆனுல், இந்தக் கொலைகாரப் பழக்கத்தைக் கைக் கொண்டிருக்கும் வடவர்கள், நம்மை இழிவாகப் பேசுவார்கள் என்பது மட்டும் உறுதி. இந்த வேறுபாட்டுக்கிடையில் 'ஒரே நாடு' என்கிற நம்பிக்கை எப்படி ஏற்பட முடியும்?

இதை இம்மட்டோடு நிறுத்திவிட்டு கடவுள், மதம் இவைகளைப் பற்றிப் பேசுவோம்.

—(தொடரும்)

இலங்கைப் பிரதமரே சற்று சிந்திப்பீராக!

இலங்கை வாழ் திராவிடர்க்கு மேன்மேலும் இடர் ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறது.

இலங்கைப்பிரதமர் சர் ஜானுக்கும் இந்திய பிரதமர் நேருவிற்கும் டில்லியில் நடைபெற்ற ஒப்பந்தத்தில், நாடற்றவர் என்று ஒரு வகுப்பார் இருக்கத் தேவையில்லை என்று கூறிய இலங்கை பிரதமர் தான், இலங்கை சட்டசபையில் பிராஜா உரிமைத் திருத்த மசோதாவை கொண்டு வந்து நிறைவேற்றி யிருக்கிறார்.

இந்த திருத்த மசோதா சட்டசபையில் விவாதத்திற்கு வரும் சமயம் பலத்த எதிர்ப்புகள் இருந்தன எதிர் கட்சியினரால்! ஆனால் பிரதமர் சர் ஜான் இதனையெல்லாம் கவனித்ததாகவோ அல்லது அதனைப்பற்றியெல்லாம் நினைத்ததாகவோ தெரியவில்லை.

இந்த பிரஜா உரிமை திருத்தத்தினால் என்னென்ன கஷ்டங்கள் நேரிடும் என இலங்கை ஜன நாயக காங்கிரஸ் தலைவர் திரு. தொண்டைமான் கண்டித்துள்ளார். அவரது அறிக்கையை கீழே படியுங்கள்.

"பிரஜா உரிமைச் சட்டத்தையும் குடியேற்ற, வெளியேற்றச் சட்டத்தையும் திருத்துவதற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கும் இரண்டு மசோதாக்களும், இந்நாட்டில் சட்ட பூர்வமாக வசிக்கும் மக்களின் மனித உரிமைகளுக்கும் பிரஜா சுதந்திரங்களுக்கும் பெரும் ஆபத்தை விளைவிக்கக்கூடியதாகயிருக்கின்றன. இவ்விரு திருத்தங்களும் குறிப்பாக இந்நாட்டில் நீண்ட காலமாகக் குடியேறி வாழும் இலங்கை வாழ் இந்தியர் சமூகத்திற்கெதிராகக் கொண்டு வரப்பட்டிருப்பதாக தோன்றுகிறது. அவர்களுக்கெதிராகக் கொண்டுவரப்படும் சட்ட சரித்திரத்தில் இது மற்றொரு மோசமான அத்தியாயமாகக் தோன்றுகிறது."

இவ்விரு மசோதாக்களையும் சட்ட புத்தகத்தில் ஏற்று முன்பு இது சம்பந்தமாக இந்திய அரசாங்கத்தாரை கலந்து கொள்ளும் என்று நம்பப்படுகிறது! இவ்விரு மசோதாவும் சட்டமாக்கப்பட்டால் இந்நாட்டு மக்களின் ஒரு பெருவாரியான பகுதியினரின் எதிர்காலத்தை இது பாதிக்கும்."

இவ்வாறு இ. ஜ. கா. தலைவர் திரு. தொண்டமான் கூறியுள்ளார்.

இந்த திருத்த மசோதாவை நிறைவேற்றி விட்டால் என்னென்ன காரியங்கள் நடைபெறும் என சட்டசபையில் பேசிய எதிர்க் கட்சித் தலைவர்கள் கூறினார்கள்.

இந்த திருத்த மசோதா விவாதத்தின்போது பேசிய சிலர்களின் பேச்சை அப்படியே தருகிறேன்:

திரு. வில்பட் ஏ. பெரேரா. பேசுகையில்: 'மக்களுக்கு பிரஜா உரிமை கொடுப்பதற்கு பதிலாக அவற்றைப் பிடுங்கிக் கொள்ள பிரதமர் விரும்புகிறார். இது பெரும் அநீதி! டில்லி ஒப்பந்தத்தின் கீழ் பிரஜா உரிமை பெறத் தகுதியுடைய இன்னும் பலர் காத்திருக்க இந்த மசோதா ஏற்கனவே பிரஜா உரிமை பெற்றிருப்பவர்களையும் பிரஜா உரிமையை இழக்கும் அபாயத்துக்கு உட்படுத்துகின்றது.

திரு. ஸி சுந்தரலிங்கம் கூறுகையில் இந்த மசோதா மனிதத் தன்மையற்றதென்று நான் கூற மாட்டேன். அப்படி சொல்வது இதன் கோரத் தன்மையை குறைத்துச் சொல்வதாகும். இம் மசோதாவை வன ஆட்சியை நிலை நாட்டும் மசோதா என்று நான் சொல்வேன். பல நாடுகளின் பிரஜா உரிமைச் சட்டங்களை சுட்டிக் காட்டிவிட்டு எந்த நாட்டிலும் பிரஜா உரிமைச் சட்டம் தேசியச் சட்டமாகக் கருதப் படுவதில்லை என்னும் ஒரு சர்வ தேசச் சட்டமாகவே கருதப்படுகிறது என்று கூறினார்.

இலங்கை கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் **பீட்டர் கெனமான்** பேசுகையில்:

இந்த மசோதாவின்படி பிரதம மந்திரி ஒரு எதேச்சாதிகாரியாக மாறிவிடுகிறாரென்றும், ஒருவருக்குப் பிரஜா உரிமை கொடுக்கப்பட்ட பிறகு, அந்த உரிமையைப் பறிக்க பிரதமருக்கு அதிகாரம் கிடைக்கிறதென்றும் பல தலைமுறைகள் கடந்தவர்களின் பிரஜா உரிமையையும் கூட பிரதம மந்திரி விரும்பினால் பிடுங்கிக் கொள்வதற்கு அதிகாரமிருக்கிறதென்றும் கூறினார்.

இவ்விதமான பலத்த எதிர்ப்புகளுக்கிடையே இலங்கை அரசாங்கக் கட்சி பிரஜா உரிமைச் சட்ட திருத்த மசோதாவை நிறைவேற்றி யிருக்கிறது.

உண்மையில் பிரஜா உரிமை மறுக்கப்படுவதற்கோ அல்லது பறிக்கப்படுவதற்கோ ஓர் கூட்டம் உள்ளது. அந்த கூட்டத்தை விரட்ட இந்த சட்டம் பயன்பட்டால் நல்லதாக யிருந்திருக்கும். அதனை விட்டு, உழைத்த உழைப்பாளியின் வியர்வை காய்வதற்குள்ளே விரட்டுவது விவேகமாகாது. வீணாக மனக் கசப்புதான் உலக மக்களிடத்தில் ஏற்படும்.

இந்த நாட்டில் பிரஜா உரிமையை கோருபவர்கள் இந்த நாட்டை சுரண்ட வந்தவர்கள் அல்ல! அப்படிப்பட்ட உளுத்தர் இருந்தால் அவர்களுக்கு மறுப்பதிலே அர்த்தமுண்டு.

இவர்களோ அப்படியல்ல!

பாழடைந்த நிலத்தைப் பக்குவப்படுத்தி, பயனுள்ளதாக்க எண்ணி இந்த நாட்டின் செல்வத்தை வளப்படுத்திய செம்மல்கள்.

கள்ளி, காளான்களை களைந்தெறிந்துவிட்டு வனப்புள்ள சோலையாக்க திட்டமிட்டு, சோலையாக ஆக்கி காட்டிய கர்ம வீரர்கள் கட்டிளங்காளைகள்.

அவர்களுக்கு நாட்டில் வாழ உரிமை கொடுப்பதால் வளமுள்ள இலங்கை வரண்டு போகாது. மாருக வளமுள்ளதாக யிருக்கும்.

அற்ப காரணங்களுக்காக, பிரஜா உரிமையை மறுப்பது மிக மிகக் கொடுமை. நியாயமுமல்ல!

புனித புத்தரின் கொள்கை பரப்பும் புத்த மதக்காரர்கள் வாழும் நாட்டின் பிரதமர் மனித தன்மைக்கு அப்பாற் செல்லலாமா?

புனித சாஞ்சி சின்னங்களை... அலங்கரிக்கப்பட்ட யானையின் மீது வைக்க, அதை சுமந்து சாது! சாது!! என கூறி வணக்கத்துடன் சுமந்து செல்லும் அவரது... இந்த திருத்த மசோதாவின் நிலைமையை நினைக்கமாட்டாரா? என பறிக்கபட்ட ஏழையின் மனம் எண்ணுகிறது.

பிரஜா உரிமையை வாபஸ் பெறும் வழக்கம் பல நாடுகளில் நிலவி வருகிற போதிலும், அதனால் ஒரு சிலரே பாதிக்கப்படுகின்றனர்.

ஆனால் இங்கு கொண்டுவரப்பட்ட சட்டமோ ஏராளமான மக்களுக்கு பெரும் அநீதிதான் விளைவிக்கும்.

பிரஜா உரிமையை பறிப்பதற்காக ஓர் சட்டம் இருந்தால், அதனை நீதி மன்றங்கள் தான் நிறைவேற்றவேண்டுமேயொழிய பிரதமரின் எண்ணப்படி அதை அமுல் நடத்தக் கூடாது.

இப்போதுள்ள சட்டப் பிரகாரம் ஒரு நபர் இலங்கை பிரஜையான ஓர் பெண்ணை மணம் செய்து கொண்டால், பிரஜா உரிமைப் பெற முடிந்தது; இனி அம்முறை செல்லாது. இவ்விதமாக திருமணம் செய்வதன் மூலம் பிரஜா உரிமைப்பெற்றவர்களின் உரிமையை பறித்து விட்டால் அவர்களின் நிலை என்ன?

இவர்களால் மீண்டும் இந்திய பிரஜையாக முடியாது இலங்கை பிரஜையாக அவர்கள் மாறுவதற்காக இந்திய பிரஜா உரிமை கைவிட்டு விட்டனரே! இதனையெல்லாம், கூர்ந்து கவனித்தால் இந்த திருத்த மசோதாவின் விபரங்கள் தெரியும்.

இந்த திருத்த மசோதாவிற்கு என்ன அப்படி அவசரம் வந்துவிட்டது!

எனவே இலங்கைப் பிரதமர் சற்று மனிதாபிமானத்துடன் நடந்து இலங்கையை குபேரபுரியாக்கிய தமிழர்களின் அவல நிலையைப் போக்க முன்வரட்டும்! புரட்சியான திட்டங்களை அமுலாக்கினால் அது வரவேற்கக்கூடியதுதான். ஆனால் மனித உரிமையை, பறிப்பதை இன்று நாகரீக உலகம் வரவேற்காது.

வி. எஸ். முருகன், இலங்கை.

இலங்கை தமிழ் மறைக் கழக வேண்டுகோள்

வள்ளுவர் திருநாளை ஆண்டுதோறும் ஒவ்வொரு வீட்டிலும் கொண்டாடுக

●

சென்ற இரண்டாண்டுகளிலும் வள்ளுவர் திருநாளாகத் தமிழினைப் பேசும் மக்கள் வாழும் இடங்கள் எங்கும் கொண்டாடச் செய்தோம். ஐம்பதற்கு மேற்பட்ட பத்திரிகைளும், நூற்றுக் கணக்கான சங்கங்களும், திருச்சி சென்னை, கொழும்பு, சிங்கப்பூர் வானொலி நிலையங்களும் எமது கழகத்தின் முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கின. சாதிமத அரசியற் கட்சி வேறுபாடுகளின்றித் தமிழ்ப்பெருமக்கள் பலர் ஆதரவளித்தனர்.

தமிழினைப் பேசும் மக்கள் யாவரும் ஒன்றுபட்டு ஆண்டுதோறும் ஒவ்வொரு வீட்டிலும் கொண்டாடுந் திருநாளாகத் திருவள்ளுவர் திருநாளை நிலைத்திடச் செய்தல் தமிழ்ப் பெருமக்களுடைய பெருங்கடனாகும். இதனை நன்கு நிறைவேற்றுதற்கு செய்ய வேண்டிய பணிகள் சிலவற்றை ஈண்டுக் குறிப்பிடுகிறோம். தமிழினத்தின் ஒற்றுமைக்காகவும், தமிழ் மக்களின் நல்வாழ்வுக்காகவும், தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகவும் இவற்றைச் செய்தருளுமாறு அன்பர்கள் யாவரையும் கேட்டுக் கொள்கிறோம்.

இந்த ஆண்டின் திருவள்ளுவர் திருநாள் 4—6—55 சனிக்கிழமை ஆகும். இந்த நாளை யாவரையும் கொண்டாடுமாறு செய்தற்கு இப்பொழுது தொடக்கமே முயலுதல் இன்றியமையாதது.

'நீத்தார் நினைவு நாள்'

எனது மாமா திருவாளர் பி. குட்டியப்பன் அவர்கள் அண்ணனும் எனது பெரிய மாமாவுமாகிய பி. மாணிக்கம் அவர்கள் உடல் நலமில்லாமல் மார்ச்சு மாதம் 10–ந்தேதி இயற்கை எய்தினர், அன்னாரின் நினைவு நாள் 27—3—55 ஞாயிறு பகல் 12 மணியளவில் சென்னை திருட்டினும்பேட்டை 127 என் இல்லத்தில் தோழர் மு. புரட்சிமணி தலைமையில் சீர்திருத்த முறையில் 'நீத்தார் நினைவு நாள்' கூட்டம் நடைபெற்றன. சீர்திருத்த முறையில் அலுவல் நடைபெற முன்வந்த உறவினர்களுக்கும் அலுவலில் கலந்துக் கொண்ட நண்பர்களுக்கும் இதன் மூலம் எங்கள் உளங்கனிந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்,

இங்ஙனம்

சாமி பி. குட்டியப்பன்

கோ. இளவரசு

பேராசிரியர் பேசுகிறார்!

வி. சுந்தரராசு, சங்கரன் பயிற்சிப் பள்ளி, திருச்சி.

3

"உலகியல் ஒன்றிப்பு இல்லாத பகுதி எதுவானாலும் சரி, வன்மையாகக் கண்டிக்க வேண்டும். தாயகத்தை இகழ்ந்து வாழ்ந்த நாடும் இல்லை; தாயகத்தை பேணி வீழ்ந்த நாடும் இல்லை; தாயக உறவு, உலகியல் எண்ணம் ஆகிய சிலவற்றை இழந்துபட்ட துறை எத்துறையானாலும் விழிப்புணர்ச்சி ஏற்படும் நேரங்களில் இதுபோன்ற துறைகளுக்கு எதிர்ப்பு தோன்றியே தீரும்" என்று மிகவும் சினந்து கொண்டு ஒரு வகுப்பறையில் சொற்பொழிவாற்றியதுண்டு!

"ஏன் இப்படியெல்லாம் நான் சினந்து சொல்ல வேண்டும்? தாய்மைப் பண்பு என்பது இரத்தபாசமன்றோ? இயற்கையாகவே உள்ளுறையும் இதய உணர்ச்சியல்லவா? இந்த இயற்கை உணர்ச்சி சமூகத்தில் மிளிர்ந்துதானே தீரும்! இந்த பண்பு பற்றி ஒரு உளறல் பேராசிரியருக்கு இவ்வளவு மனக் கவலையா?" என்றெல்லாம் மாணவர்கள் பேசிக் கொள்வார்களாம்!

ஆனால் என் புண்பட்ட மனமோ துயரத்தைத் தாங்க இயலவில்லை. வகுப்பறையில் இதுபோன்ற சொற்பொழிவினை நிகழ்த்துவதை வன்மையாகப் பேராசிரியத் தலைவரும் கண்டிப்பதுண்டு. ஆனால் என் துயர மனமோ இந்த எண்ணங்களை இளமை உள்ளத்திலாவது எழுப்பி வெற்றி பெறுமாறு தூண்டுகிறது.

நாங்கள் பேராசிரியர்கள்தான்; உலகத்தை முழுதும் உணர்ந்து கொள்ளாதவர்கள்தான்; புத்தகமே வாழ்வாக இருந்த மாணவப் பருவம் நீங்கிய பின்னும் படித்ததைப் பாடமாகக் கற்பிக்கும் குறுகிய தொழில் நடத்தக் கூடியவர்கள்தான்; எவ்வளவுதான் குறுகிய தொழிலை நடத்தக் கூடியவர்களாக நாங்கள் இருந்தாலும் எங்கள் தொழிலிலே தூய்மையை பார்க்க முடிகிறது. தூய்மையான எண்ணம் வளரவும் வாய்ப்பும் வளருகிறது. அனுதினமும் ஆயிரக் கணக்கான மாணவர்களைக் கல்லூரியில் சந்திக்கிறேன்; நூற்றுக் கணக்கான மாணவர்கள் வகுப்பறைக்கு வருகிறார்கள்; சொற்பொழிவை கேட்டு மகிழ்ந்தும் மகிழாமலும் பண்பட்ட மிகப்பொலிவுடன் காட்சியளிக்கிறார்கள்.

ஒரு தொழில் நடத்தும், அன்றி ஒரு இனத்தைச் சார்ந்த, அன்றியும் ஒரே பகுதியைச் சேர்ந்த—மாணவர்கள் அல்ல; நிறத்தாலும் இனத்தாலும், குலத்தாலும் தொழிற் துறையாலும் பல்வேறு வகைப்பட்ட மாணவர்கள், பால்வேறுபாடு, இன வேறுபாடு—ஆகியவற்றோடு இணைவுபடுத்தப்பட்ட மாணவர்கள் வகுப்பறைக்கு வருகிறார்கள். எந்தவிதமான வெறுப்பு, வேற்றுமையும் இல்லாமல் பழகும் தோழமை உள்ளத்தைக் காணுகிறேன். ஏழை பணக்கார வேற்றுமை இனத்தாலும் குலத்தாலும் ஏற்றதாழ்வு—ஆகிய இவைகள் ஒரு சிறிதும் இல்லாத ஒரு பொது அரங்கம்தான் வகுப்பறை என்பது. வேற்றுமையில்லாத நல்லொழுக்க சோலையது. புதுமை உள்ளம் பூரித்து—பேராசிரியர்கள் நவிலும் எண்ணங்களை ஏற்று பிறருக்கும் வீசும் தென்றலினையும் ஒத்த மாணவர்கள் தவழும் கலைக்கூடம் என்றும் சொல்லுவேன்.

அடிக்கடி ஏனைய பேராசிரியர்கள் இதனைக்கண்டு மகிழ்வதுண்டு; ஆனால் நான் மட்டும் இந்த ஒன்றித்த மாணவ வாழ்க்கையைக்கண்டு கண் கலங்குகிறேன். ஏன் கண் கலங்க வேண்டும்? இதில் என்ன துயரம் கண்டாய்?—என்று கேட்கலாம்: பேராசிரியன் கிணற்றுத் தவளையை ஒத்தவனல்ல; அவனுக்கும் சமுதாயத்தைப் பற்றிய அக்கறை உண்டு; உலக ஒன்றிப்பில் மிகவும் ஆர்வம் உள்ளவன் அவன் ஒருவன்தான்! எனவேதான் நல்லதைக் கண்டும் துயரப்படுகிறேன். — நல்லதைக் காணும்போது இந்த வல்லமை நான் கருதும் சமுதாயத்தில் பொலியவில்லையே என்ற எண்ணம் தோன்றி துயரத்தை வளர்த்து விடுகிறது. எனவேதான் துயரப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. மாணவர்களிடம் இல்லாத இந்த நிற, இன, பால் வேறுபாடு சமுதாயத்திலே மட்டும் ஏன் வளர்ந்து தொல்லை தருகிறதோ தெரியவில்லை.

உலகியல் நாடுகளின் வரலாறுகளை அனுதினமும் படிக்கிறேன். உலக அரங்கில் ஒவ்வொரு துறையிலும் முன்னேற்றமடையும் மக்கள் கூட்டத்தை உணராதவனல்ல நான்; அந்தந்த நாட்டிற்கு வேண்டிய நாட்டுப்பற்று, மொழி உணர்ச்சி, இன எழுச்சி ஆகிய இவைகள் பெரிதும் மிளிர்வதைக் காணுகிறேன். ஆம்! அது சாதாரணமான உணர்ச்சியோடு நின்றுவிடவில்லை. தாய்மைப் பற்றாக இருகப்பற்றியுள்ள இயற்கை கூறுபாடு அது. குடும்பமானாலும், இனமானாலும், நாடானாலும், கண்டமானாலும், உலகானாலும். உயிர்வாழ் இனமானாலும்—தாய்மைப்பற்று என்று இயற்கை அறம் என்பதை உணர்ந்து கொள்ள கடமைப்பட்டவைகள்.

இந்த இயற்கை நெறியைத்தான் என் தாயகத்தில் காண இயலவில்லை. அடிக்கடி அறிஞர்கள் கூட்டத்தார் நாடெங்கும் ஒன்றுபட்ட சமுதாயம் அமைய வேண்டிய அவசியத்தைப் பத்திரிகையாலும், மேடைப் பேச்சாலும், திரைப்படத்தாலும், நாடகத்தாலும் பரப்பி வருவதைப் பார்க்கிறேன். உயர்ந்த இலட்சிய உண்மைகளை எடுத்துச் சொல்வதில் உயிருக்கும் அஞ்சாது உழைக்கிறார்கள்: ஆனால் மக்கள் கூட்டம்தான் இன்னும் திருந்தியபாடில்லை. சாதி ஆச்சாரத்தால் அழிந்துபட்ட குடும்பங்கள்தான் எத்தனை? எத்தனை? இருந்தும் குறுகிய அந்த எண்ணத்தை மக்கள் கூட்டத்தார் பெரிதும் பேணி வளர்ப்பதைக் காணுகிறேன். எனவே தான் ஒன்றுபட்ட சமுதாய இலட்சியத்தை மாணவர்களிடையே காணும் போது கண் கலங்குகிறேன்.

நாடெங்கும் மிளிர வேண்டிய இலட்சியமல்லவா இது! மாணவர்களிடையே தானே இந்த உயர்ந்த தத்துவ உண்மை மிளிர்வதைக் காண முடிகிறது! ஒன்றுபட்ட சமுதாயம் ஏன் தமிழகத்தில் மட்டிலும் மிளிர இயலவில்லை என்று கூட சிந்தித்தேன். உண்மை இப்போதுதான் புலனாயிற்று! சூழ் நிலைக்கு அடிமையாக்கப்பட்டு விட்டதால் தான் தாயகம் வாழ வழி ஏதும் இல்லாமற்போன உண்மையை இப்போது தான் நான் உணர்ந்து கொண்டேன்!

உலகெங்கும் பரந்து கிடக்கும் நாடுகளுக்குள் தமிழகத்திற்கு மட்டிலும் ஒரு தனிப் பண்பு உண்டு. எந்த நாட்டிற்கும் அன்னியன் ஒருவன் வந்து புகுந்தால் இந்த நாட்டின் சூழ்நிலையில் வாழப் பழகவேண்டும், வந்து புகுந்த அன்னியன் வாழ்வில் மயங்கி அவனது வாழ்க்கையைப் பற்றும் நாடு உலகில் ஏதும் இல்லை என்றே சொல்வேன், ஆனால் என் தாயகம் மட்டிலும்தான் இந்த உலக உண்மைக்கு ஓர்விலக்கு என்பேன். எம் தாயகத்தில் மட்டிலும்தான் வந்து புகுந்தோரின் வாழ்க்கையில் மோகங் கொண்டு தாயக நெறியையும் இழந்துபடுகிறார்கள். எனவேதான் தாய்மொழியைப் பேணாதநாடாகவும், தாய்மைப்பற்றை உணராத வாழ்வாகவும் தமிழகம் உருமாறியதை உணர்கிறேன். பிறநாட்டு மோகம் தாயக நெறிக்குக் குந்தகம் விளைவிப்பதானால் என் தாயகம் தடுத்தாலும் விடேன் என்று அந்த கவிஞர் சொன்னாராம்! பாவம்! இந்த உண்மையைச் சொன்னதால் தான் அந்த உத்தமமான கவிஞரைத் தமிழகத்திலேயே ஒரு சாரார் வெறுப்படைகின்றனர், தாயகத்தைக் காக்கத் தயங்கமாட்டேன் என்று இயம்பிய கவிஞனை எதிர்த்து வசைபாடிய நூல்களும், மேடைப்பேச்சாளரும் இன்னும் மிளிர்கின்றார்களே என்பதை எண்ணும்போதுதான் இதயம் புண்படுகிறது!

அன்பில்லாத உள்ளங்களில் இந்த தாய்மைப்பற்றை வளர்க்கத்தான் நாடெங்கும் மறுமலர்ச்சிக் கழகங்கள் மிளிர்வதைக் காணுகிறேன். மலர்ந்த பாதையில் இதய ஒன்றிப்பு காணத் துடிக்கும் எத்தனையோ இளைஞர்கள் உள்ளங்களையும் காணுகிறேன். ஒன்றுபட்ட சமுதாயம் நிலவும் அந்த நாள் என்று வரும் என்று ஏங்கும் இலட்சக்கணக்கான மக்கள் வாழும் நாடுதான் இது! இங்கேதான் புத்துணர்ச்சி எண்ணங்கள் மக்கள் உள்ளத்தில் பெரிதும் மிளிர்கிறது! அதே சமயத்தில்தான் தாயக உணர்ச்சியைத் துண்டிக்கும் எண்ணம் படைத்தவர்களும் வாழவழி படைத்த நாடாகவும் ஆகிவிட்டது! தாயகத்தை மறந்து வேறோர் தாயகத்திற்குஅடிபணிந்து வேலை செய்யவும் துணிவு பெற்ற நாடாகி விட்டது!

தமிழன் மேனாடு சென்றால் மேனாட்டு முறைக்கு ஏற்ப தன் சூழ்நிலையை மாற்றிக் கொள்ள வேண்டும். இன்றேல் அந்நாட்டு சமுதாயம் இவனுக்கு ஏற்ற இடம் அளிக்காது; ஆனால் தமிழனோ வந்து புகுந்த வாழ்வு வஞ்சக வாழ்வானாலும் மோக உள்ளம் தூண்டிவிடப்பட்டு, தன் தாயக அறத்தையும் மறந்து பற்றிவிடுகிறான். என்னே சூழ்நிலை இது! என்னே இழிநிலை! இந்தத் தனிச் சிறப்பு உலக நாடுகளில் எந்த நாட்டிற்கும் கிடைக்கப்பெறாத, ஆனால் தமிழகத்தில் மட்டிலும் ஒழிந்துபட்ட ஓர் சிறப்பு என்றுதான் கூறுவேன்.

எத்தனைக் காலங்களாக் சிறப்பு குன்றாது வாழ்ந்த நாடு இது! சேர, சோழ, பாண்டிய பெருமைகளை எண்ண எண்ண உள்ளம் பூரிப்படைகிறது! இருந்தும் திக்குத் திசை தெரியாத வாழ்க்கையைத்தானே தமிழர்கள் மேற்கொண்டு விட்டோம்! இவற்றை நினைக்க நினைக்க நெஞ்சம் மிகவும் புண்படுவதுண்டு. வாழ்ந்த நாட்டின் மீது ஏன் இந்த வஞ்சக எண்ணம். தமிழரில் சிலருக்கு ஏற்பட்டுவிட்டது என்று அடிக்கடி பேராசிரிய மன்றத்திலே விவாதம் நடப்பதுண்டு. எங்கள் பேராசிரிய மன்றத்தில் நிறைவேறிய ஏகோபித்த எண்ணமிது! எனவே துணிந்து வெளியிடுகிறேன். தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்களும், அன்றி தமிழ்தான் தாய்மொழி என்று எண்ணாதவர்களும் தமிழகத்தில் எண்ணிக்கைக்கு அப்பாற்பட்டு மலிந்துவிட்டனர்.

தாய்மைப் பாசம் என்றால் இரத்த ஒன்றிப்பு! அது இதய ஒன்றிப்போடு நின்றுவிடவில்லை. இறந்துபட்ட காலத்திலும் இன்றைய ஆண்டுகளிலும், எதிர்காலத்தில் ஒன்றிக்க உறுதி பூண்ட சமுதாயத்தின் உயிர்நாடி அது! சமுதாயம் இல்லாத நாடு வாழ்ந்ததும் இல்லை! சமுதாயத்தை பேணிக் காத்த நாடு அழிந்துபட்டதும் இல்லை! சாய்ந்த மன்னர்களின் பரம்பரைகூட சமுதாயத்தின் மீது தோன்றிய பொறாமை காரணமாகத்தான்; உலக நாடுகளில் இந்த உண்மைக்கு எண்ணிக்கைக்கு அப்பாற்பட்ட சான்றுகள் உண்டு!

ஆங்கில நாட்டினில் ஜானும்

திக்கெட்டும் ஐந்தாண்டுத் திட்ட கண்டன நாள்

பேரூர் பொதுக் குழுவின் தீர்மானப்படி, திக்கெட்டும் 'ஐந்தாண்டுத் திட்டக் கண்டன நாள்' பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள் தி. மு. கழகத் தோழர்களால், நடத்தப்பட்டது. கண்டனத் தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டுள்ளது.

பம்பாய்

பம்பாய் தி· மு. க. சார்பில் ஐந்தாண்டுத் திட்டக் கண்டனப் பொதுக்கூட்டம் 20—3—55 ஞாயிறு மாலை 6–30 மணிக்கு தாராவி வ· உ· சி திடலில் கழகச் செயலாளர் சி· த. மு· இர. ஆரிய சங்காரன் தலைமையில் நடைபெற்றது.

தோழர் எஸ் எஸ். சண்முகநாதன் திராவிடப்பண் பாடியபின்னர், துணைச் செயலாளர் சா· தர்மராசன் கூட்டம் கூட்டப்படும் நோக்கத்தை விளக்கி, செயலாளர் அவர்களைத் தலைமைதாங்கி நடத்தித் தருமாறு கேட்டுக் கொண்டார்.

ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாடு புறக்கணிக்கப்பட்டிருப்பதை விளக்கியும், வடவரின் வன்னெஞ்சப் போக்கையும் தலைவர் முன்னுரையில் குறிப்பிட்டார்.

அடுத்து தோழர்கள் புத்தரசு. த· மு. பொற்கோ, பட்டுக்கோட்டைத் தனுக்கோடி, எஸ். வள்ளிநாயகம், ப. மா· தி. மு· க· துணைச்செயலாளர் யோ. தர்மராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திலும் திராவிடம் புறக்கணிக்கப்பட்டு வடநாட்டை வளம்கொழிக்கும் சோலையாக மாற்றும் அளவுக்கு வடநாட்டில் மிகப்பெரிய தொழிற்சாலைகளை ஏற்படுத்தத் துணிந்த இந்திய சர்க்காரின் நிர்வாகத்தை வன்மையாகக் கண்டிக்கிறது என, தீர்மானம் நிறைவேற்றப்பட்டன.

தலைவர் பின்னுரைக்கு அடுத்து, துணைச்செயலாளர் தோழர் சா· தர்மராசன் நன்றி கூற கூட்டம் இரவு 10–30 மணிக்கு முடிவுற்றது.

கொலாபா (பம்பாய்)

ஐந்தாண்டு திட்ட கண்டன கூட்டம் கொலாபா தி. மு. க.வின் சார்பாக 20–3–55–ல் கூப்ரேஜ திடலில் 9–30 மணிக்கு கழக செயலாளர் எஸ். கே. ராஜு தலைமையில் நடைபெற்றது· அதுபோது தோழர்கள் ஆர்· ஜே. ஜார்ஜ், க. சு. ஜெகநாதன், எஸ் பி. பெருமாள், கே. கே. இராமநாதன் ஆகியவர்கள் ஐந்தாண்டுத்திட்டத்தைக் கண்டித்துப் பேசினர்.

சுதந்திர இந்தியாவின் முன்னேற்றத்திற்காக மத்திய அரசினரால் ஐந்தாண்டுத் திட்டம் என்னும் பெயரில் வடநாட்டிலேயே பல கோடி ரூபாய்களை செலவு செய்து நீர் தேக்கங்களும், தொழிற்சாலைகளும் ஏற்படுத்திவிட்டு தென்னாடான நமது திராவிடத்தை ஒதுக்கி அதற்குரிய தொகையை செலவு செய்யாது விட்டுவிட்டதையும் இக்கூட்டம் வன்மையாகக் கண்டிப்பதுடன் வரும் ஐந்தாண்டு திட்டத்திலாவது தென்னாட்டுக்குரிய பங்கை செலவு செய்ய கேட்டுக் கொள்கிறது என்றும் இந்த விளக்கத்தை சென்னை சர்க்கார் மத்திய சர்க்காருக்கு உடனடியாகத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறது என்றும் தீர்மானம் நிறைவேறியது

சமால்பூர் (ஆமதாபாத்)

20–3–55 அன்று மாலை 5 மணிக்கு சமால்பூர் தி· மு· கழக இல்லத்தில் நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் ஐந்தாண்டுத் திட்டத்தை கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

நாகை

20–3–55 ஞாயிறு மாலை 6 மணிக்கு நாகை தி· மு கழக கட்டிடத்தில் தோழர் ஆர். கிருஷ்ணமூர்த்தி தலைமையில் ஐந்தாண்டுத் திட்ட கண்டனநாள் கூட்டம் நடைபெற்றது, எ எஸ்· பாண்டியன், ஜோஸப், கே. கே சித்திரவேலு ஆகியோர்கள் பேசிய பின்னர் பொறையார் தோழர் சி· ஐம்பு அவர்கள் ஐந்தாண்டு திட்டத்தைப் பற்றியும் திராவிடத்தின் வளம், அதன் மூலம் வரும் வருவாய் அவ்வருவாய் எப்படி மத்திய சர்க்காரால் சுரண்டப்படுகிறது என்பதைப்பற்றி புள்ளிவிவரங்களுடன் விளக்கிப் பேசினர். முடிவில் இந்திய சர்க்காரின் ஐந்தாண்டுத் திட்டத்தை கண்டித்து தீர்மானம் நிறைவேறியதும் தலைவர் முடிவுரைக்குப்பின் கூட்டம் முடிவுற்றது

பள்ளிகொண்டா

20—3—55 அன்று மாலை 6 மணிக்கு பள்ளிகொண்டா தி. மு· கழக செயற்குழு கூட்டம் பி. சி. விசுவநாதன் தலைமையில் கூடியது; ஐந்தாண்டுத் திட்டத்தை கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஒட்டன் சத்திரம்

20—3—55 அன்றுமாலை 6 மணிக்கு வ. உ. சி· திடலில், நல்லகுமார் தலைமையில் ஐந்தாண்டுத் திட்டக் கண்டன நாள் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தம்பிதுரை, நா. ரெங்கசாமி ஆகியோர் ஐந்தாண்டுத் திட்டத்தைக் கண்டித்து பேசினர்.

மல்லசமுத்திரம்

20—3—55-ல் தோழர் எம்· ஆர். ஆறுமுகம் தலைமையில் வெள்ளாஞ் செட்டியார் மண்டபத்தில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் தோழர் மா. தேவராசனால் முன்மொழியப்பட்டு தோழர் எம். பி· நாச்சிமுத்துவால் வழிமொழியப்பட்ட ஐந்தாண்டுத் திட்ட கண்டனத் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

புதுப்பட்டி

புதுப்பட்டி தி. மு கழகக் கிளையின் கண்டனக் கூட்டம 20—3—55 அன்று சு நல்லுசாமி தலைமையில் நடைபெற்றது. கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டன.

வடநாடு தென்னாட்டை உதாசீனப்படுத்தி வடநாடு வாழவும் தென்னாடு தேயவுமான வகையில் ஐந்தாண்டுத் திட்டங்களை உருவாக்குவதை இக்கூட்டம் வன்மையுடன் கண்டிக்கிறது·

வரும் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திலாவது நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம் சேலம் இரும்புத் தொழிற்சாலை போன்ற பெரிய திட்டங்களையும் இன்னும் இதுபோன்ற கைத்தொழில் வளரவுமான வகையில் திட்டங்கள் தீட்டும்படி மத்திய அரசாங்கத்தை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

வடநாடு வளம்பெறவும் அதேசமயம் தென்னாடு அதன் சந்தையுமான குது திட்டங்களை மத்திய அரசாங்கம் தயாரித்து தென்னாட்டைப் புறக்கணிககுமேயானுல் அதனுல் விபரீத விளைவுகள் ஏற்படுமென எச்சரிக்கிறது.

பேராவூரணி

சென்ற 20—3—55 அன்று மாலை 4 மணிக்கு பேராவூரணி, ஆதனூர், ஊமத்தநாடு தி. மு. க· தோழர்களால் எம். கே. கணேசன் அவர்கள் தலைமையில் ஐந்தாண்டுக் திட்டக் கண்டன ஊர்வலம் பேராவூரணி முக்கியக் கடைவீதியின் வழியாக நடத்தப்பட்டது ஐந்தாண்டுத் திட்டத்தைக் கண்டித்துப் பல தோழர்கள் பேசினர்கள்.

குன்றத்தூர்

20—3—55 மாலை 4 மணிக்கு ஐந்தாண்டுத் திட்டக் கண்டன ஊர்வலமும் மாலை 6 மணிக்கு தோழர் டி· எம். இராமலிங்கம் தலைமையில் பெரிய தெருவில் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் டி நாகப்பன், சி சண்முகம், டி· டி தணிகாசலம், டி. எம். கணபதி ஆகியோர் ஐந்தாண்டுத் திட்டத்தினுல் வடநாடு வளமிக்க நாடாக மாறுவதும் தென்னகம் வளம்குன்றி வருவதையும் விரிவாக எடுத்துக் கூறினர்.

முத்துசாமிபுரம் (இ.நா. புரம் மாவட்டம்)

20—3—55 மாலை $6\frac{1}{2}$ மணியளவில் ஊர்வலமும் இரவு $7\frac{1}{2}$ மணியளவில் தோழர் பெ. பெருமாள் தலைமையில் கண்டனப் பொதுக்கூட்டமும் நடைபெற்றது· தோழர் ஆ· சண்முகவேல் சொற்பொழிவாற்றினர்.

சத்திரப்பட்டி

20—3—55 இரவு 9 மணிக்கு திரு. வி. க· நினைவுப் படிப்பகத்தில் தோழர் ச. உமையாளு தலைமையில் நடைபெற்றது· தோழர்கள் சு. இராசகோபால் எஸ். எழிலரசு, வளர்மதி. ஏ· இரசேந்திரன், என்· முத்துச்சாமி மற்றும் பல தோழர்களும் சொற்பொழிவாற்றினர்.

சீர்காழி

23–3–55 அன்று மாலை 6–30 க்கு சீர்காழி எஸ். ஆர். சி. திடலில் தி. மு. க. சார்பில் ஐந்தாண்டு திட்டக் கண்டனக் கூட்டம் நடைபெற்றது· 'திராவிடன்' ஆசிரியர் தோழர் என். வி. நடராசன் அவர்கள் நீண்டநேரம் சொற்பொழிவாற்றினர். இறுதியில் ஐந்தாண்டு திட்டத்தை எதிர்த்து கண்டன தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சென்னை டில்லி அரசுகளுக்கு கண்டனத் தீர்மான நகல் அனுப்பப்பட்டது·

சுந்தரபாண்டியம்

தி. மு. கழகத்தின் சார்பாக 21—3—55ந் தேதியன்று இரவு 7 மணிக்கு அண்ணு திடலில் மாபெரும் பொதுக்கூட்டம் மதுரை எஸ். முத்து தலைமையில் நடைபெற்றது.

எஸ். எ. ஜி. சாமி நாட்டுப் பண்பாட கூட்டம் துவக்கப்பட்டு கடையநல்லூர் ஆ. திராவிடமணி, ஈரோடு எஸ்· அப்பாவு அவர்கள் ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாடு புறக்கணிக்கப்பட்டிருப்பதையும் கைத்தறி நெசவாளர்களுக்கு குறிப்பிட்ட சில ரகங்களை ஒதுக்கி நிரந்தர நிவாரணம் அளிக்க வேண்டிய அவசியம்பற்றியும் விரிவாகப் பேசியபின் தோழர் ஈ. வி· கே. சம்பத் பேசுகையில் இந்தியசர்க்காரின் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாடு தாழவும் வடநாடு வாழவும் வகை செய்யப்பட்டிருக்கிறது· இப்படியே நாம் கவனமில்லாமல் விட்டுக்கொண்டே போனுல் தென்னாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வடநாட்டில் உற்பத்தியாகும் பொருள்களுக்கு தென்னாடு வியாபாரச் சந்தையாக்கப்பட்டு இங்குள்ள மக்கள் பசியாலும் பஞ்சத்தாலும் வாடவேண்டிய நிலை ஏற்படுமென்பதை மிகவிளக்கமாக விரிவுரையாற்றினர்.

கம்பம்

23—3—55 இரவு 10–மணிக்கு கம்பம் வ. உ. சி. மைதானத்தில் தோழர் எம்· சிக்கந்தர் தலைமையில் ஐந்தாண்டுத் திட்ட கண்டன நாள் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

அவ்வமயம் தோழர்கள் பி செல்லையா கே. ஏ கலியபெருமாள். எஸ். முத்து, எஸ். அப்பாவு ஆகியோர் பேசியபின் தோழர் ஈ. வி. கே. சம்பத் அவர்கள் மத்திய சர்க்கார் ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாட்டுக்கு இழைத்துவரும் கேடுகளைப் பற்றியும் தென்னாடு வளமான நாடாக ஆகவேண்டுமானுல் வடநாட்டாரின் பிடியிலிருந்து விடுபட்டால் தான் முடியும் என்றும் விளக்கிப் பேசினர்.

பின்னர் ஐந்தாண்டுத் திட்டத்தைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சென்னை 37-வது வட்டம்

20—3—55 மாலை 5 மணிக்கு சென்னை இராயப்பட்டை கழகப்பணி மனையில் தோழர் டி. ஞானசேகரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், தோழர்கள் பொ. ஏழுமலை, பொ. நா· சண்முகம் மு· க. மோய்தீன், கோ. இளவரசு, மு· புரட்சிமணி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்·

கைத்தறித் துணியையே ஆதரியுங்கள்

(John) ஜேம்ஸ் (James) ம் அழிந்தது கூட சமுதாயத்தை மன்னனின் அடிமைப் பீடம் என்று எண்ணியதனுல் தான். மக்களின் இதயதாகமது! மக்களுள் தோன்றிய மாணிக்கங்கள் — சிந்தனையால் தோன்றிய சிற்பிகள் எழுப்பிய இதயக்கோபுரமது! இவ்வளவு உயர்ந்த சமுதாயம் பிளவுபடுவதற்கு புகுத்தபடுவது சாதி முறையானுலும், ஆச்சாரமானுலும், நிறவேறு பாடானுலும், தொழில் வேற்றுமையானுலும் உறுதியாக அழிந்தேதீரும்! இந்த உறுதிப்பட்ட எண்ணம் ஈடேருதற்கு சமுதாயம் என்றேனும் ஒரு நாளைக்கு விழிப்புணர்ச்சி பெற்றே தீரும்!

அந்த விழிப்புணர்ச்சியின் பயனுகத் தான் நாடெங்கும் மலர்ந்துவரும் மறுமலர்ச்சிக் கழகங்களைக் காணுகிறேன். ஆம்! அது மறுமலர்ச்சி பாசறையும்கூட! சமுதாய நம்பிக்கையின் அடிப்படையிலே தோன்றியது! எனவேதான் சமுதாய அமைப்பின் உயிர் நாடியை இருகப்பற்ற விரும்புகிறது! இதுவும் இயற்கை நெறிதான். சமுதாயம் சாய்ந்து பட்டுவிட்டால் அந்த சமுதாயத்தில் வாழ்ந்த மக்கள் மாக்களாகவன்றே கருதப்படுவார்கள் என்ற எண்ணம் உடன் இயங்கி வருகிறது! மக்கள் மாக்களல்ல— என்ற பகுத்தறிவு எண்ணம் மலர்ந்துவிட்டது! எனவேதான் சாய்ந்த சமுதாயங்களில் புதிய நம்பிக்கை மலர்கிறது!

அந்த ஒப்பற்ற நம்பிக்கைதான்—தாய்மைப்பற்று! தாயகத்தை எண்ணிப்பார்! உனக்கு எட்டாதவற்றை எட்டிப் பிடித்து விட்டதாக எண்ணிக் கொண்டு வாழ்க்கைக்கு ஆகாத எண்ணங்களை பிதற்றுதே! உனக்கு எட்டியுள்ள சமுதாயம் மலர உறுதுணை செய்! சமுதாயம் மலர மிகவும் அடிப்படையானது தாய்மைப்பற்று ஒன்றுதான்! தாய்மைப் பற்றும் மொழி உணர்ச்சியும் இனஎழுச்சியும் இல்லாத சமுதாயமும் நாடும் அழிந்துபடும்! அந்த ஒரு ஒப்பற்ற பற்றினை வளர்க்க உறுதுணை செய்!

(தொடரும்)

காமராசருக்கு கலைவாணரின் வேண்டுகோள்

அறிஞர் அண்ணா கூறியதை நினைவூட்டினார்

கலை அரங்கம்

"[illegible]"

1960-ம் ஆண்டு மேதின விழாவில் அறிஞர் அண்ணா அவர்கள் சொற்பொழிவாற்றுகையில், "தொழிலாளர்கள் கூலி உயர்வு கேட்கும் பிரச்சினை யோடு இன்னும் காலத்தை கடத்துவது போதாது. தொழிற்சாலைகள் அனைத்தும் அரசாங்கத்தின் வசத்தாகவேண்டும். தொழிற்சாலைகள் மட்டுமல்ல, சினிமா தியேட்டர்கள் கூட சர்க்காரின் சொந்தமாக மாறவேண்டும். அந்த சினிமாக்களின் பெரும் வருவாயைக் கொண்டு, மாவட்ட ஆட்சி மன்றங்கள் பயன்படுத்தி மக்கள்மீது சுமத்தப்பட்டிருக்கும் வரிச்சுமையைக் குறைக்கவேண்டும். இதனால் விலை குறைவும் அறிவு வளர்ச்சி வளரும். தி. மு. கழகத்தின் இவ்வேண்டுகோளை அரசியலார் ஏற்று வேலை முறையில் ஆவன செய்வார்களா?" என்று எடுத்துக் காட்டினார் அறிஞர் அண்ணா.

இந்த எடுத்துக்காட்டை கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள் சென்னை முதலமைச்சர் காமராசர் அவர்களுக்கு மீண்டும் நினைவுபடுத்தி யிருக்கிறார்.

•

நாட்டிலுள்ள எல்லா சினிமா கொட்டகைகளையும் அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டும். அப்பொழுதுதான் சினிமா கட்டணங்களை குறைத்து பெரும்பாலான ஏழை மக்கள் சினிமா பார்த்து பயனடையச் செய்யவும், மற்றும் அதன் வருவாயைக் கொண்டு மக்களுக்கு நன்மைகள் செய்யவும் முடியும் என்று காமராசர் கலந்து கொண்ட கூட்டத்தில் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் கூறினார்.

23—3—55 அன்று சென்னை கோகலே மண்டபத்தில் முதலமைச்சர் காமராசரால் துவக்கி வைக்கப்பட்ட தென் இந்திய சினிமா தொழிலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் பேசுகையில் கூறியதாவது:—

சினிமா கொட்டகைகளை எல்லாம் அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டும் என்று நீங்கள் (தொழிலாளர்கள்) கேட்கிறீர்கள். இது மிகவும் முக்கியமானது.

சினிமா கொட்டகைகளில் கட்டணம் அதிகமாக வாங்கப்படுகிறது. இதனால் ஏழைகள் அதிகம் பேர் வருவதில்லை.

படிக்க வசதி இல்லாத சாதாரண ஏழை மக்கள் அறிவு பெறுவதற்கு சினிமா ஒன்றுதான் சிறந்த சாதனம். "வெறும் பொழுது போக்குக்காகவே சினிமா படம்" என்று எஸ். எஸ். வாசன் போன்ற பெரியவர்களே சொல்லி யிருக்கிறார்கள். உண்மை தான். ஆனால் சினிமா படம் என்று எடுத்தால் அதில் கதை இருக்கும்; அதில் அழகும் நகைச்சுவையும் இருக்கும். குடும்ப தொல்லைகளை நிவர்த்திக்கும்.

அப்படி எல்லாம் இல்லாமல் வெறும் 'பிசினஸ்''க்காக மட்டும் படம் பிடிப்பது என்பது முடியவே முடியாது. மார்தட்டி சொல்லுவேன் ஒருவராலும் அப்படி எடுக்க முடியாது. கண்ணுக்கினிய காட்சிகளும் காதுக்கினிய பாட்டுகளும் இருக்க வேண்டும். மனதுக்கினிய கருத்துகளும் இருக்க வேண்டும்.

எவ்வளவு நன்றாக படம் எடுத்தாலும் அவற்றை வந்து பார்க்க மக்கள் வராமல் போனால் என்ன பலன்? குறைந்த கட்டணங்கள் வைத்தால் பெருவாரியான மக்கள் கண்டு களிப்பார்கள்.

இதைச் செய்ய அரசாங்கத்தால்தான் முடியும். ஆதலாலே அரசாங்கமே சினிமா கொட்டகைகளை ஏற்று நடத்த வேண்டும், என்கிற உங்களது கோரிக்கையை நன்றாக வற்புறுத்துங்கள்.

நமது நாட்டில் நல்ல சமுதாய அமைப்பு வந்தே தீரும். நான் பாடியுள்ளது போல 1960-ம் வருஷத்துக்குள் நமது கஷ்டங்கள் தீர்ந்து நல்ல காலம்பிறந்திடும், என்று கலைவாணர் என். எஸ். கே. கூறினார்.

●

காஞ்சியில் கலைவிழா

(ஏழை மாணவர் உதவி நிதிக்காக)

காஞ்சீபுரம் கண்ணன் டாக்கீஸ் மைதானத்தில் 30—3—55 முதல் 5—4—55 வரை தினசரி இரவு 10 மணிக்கு நாடகங்கள் நடைபெறும்.

30—3—55—எஸ். எஸ். இராசேந்திரன் குழுவினரின் மகாராணி—தலைவர்: திரு லோபோபிரபு

31—3—55—மனோகர் குழுவினரின் இன்ப நாள்—தலைவர் எஸ், சுயம்பிரகாசம் எம். எல். ஏ.

1—4—55—எம். ஜி. ராமச்சந்திரன் குழுவினரின் ஆசை நினைவு—தலைவர் டி. சண்முகம் எம். எல். ஏ.

2—4—55 எம். ஜி. ஆர் குழுவினரின் பகைவனின் காதலி; எஸ். தெய்வசிகாமணி, எம்.எல்.ஏ

3—4—55—தியாகராயர் கல்லூரி கலைக்குழுவினரின் மணிநாட்டுகூனன் தலைவர்: ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ.

4—4—55—தியாகராயர் கலைக் குழுவினரின் எதிர்பார்த்தது—தலைவர்: ஈ. வி. கே. சம்பத்.

5—4—55—என். எஸ். கிருஷ்ணன் டி. ஏ. மதுரம் நடிக்கும் தளபதி—தலைவர்: அறிஞர் அண்ணா.

நன்கொடையாளர்: ரூ. 25
விழாமுழுமைக்கும்: ரூ. 10
தினசரி: ரூ. 2, அணா 12
பெண்களுக்கு அணா 8

●

அரியலூரில் ராதாவின் ராமாயணம்

27—3—55 அரியலூரில் நடிகவேள் ராதாவின் ராமாயணம் வெற்றிகரமாக நடந்தேறியது. கொட்டகை நிரம்பி வழிய மக்கள் கூடி யிருந்தார்கள், ஏராளமானவர்கள் இடமின்றி திரும்பினார்கள்.

நடிகவேள் ராதா அவர்கள் ராமனாகத்தோன்றி நடிக்கும் ஒவ்வொரு காட்சியிலும் பெருத்த ஆரவாரமும் கைதட்டுதலும் மக்களிடையே மகிழ்ச்சியும் உண்டாக்கி யிருந்தது.

ராதா அவர்களைப் பாராட்டி மலர்மாலைகளும் வாழ்த்துரைகளும், பொதுமக்கள் சார்பில், திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகங்கள் சார்பில் வழங்கப்பட்டன.

எம். ஆர். இராதா சுற்றுப்பயணம்

2—3—55 முதல் 6-4-55வரை கோயமுத்தூர்
7—4—55 'ரத்தக்கண்ணீர்' சேந்தமங்கலம்

இதுதான் தொழிற்சங்கப் பணியா?

●

கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மதுரை கே. டி. கே. தங்கமணியும் அம்பாசமுத்திரம் நல்லசிவனும் 22-ந் தேதி இரவு 8-30 மணி ரயிலில் தூத்துக்குடிக்கு வந்து மில் தொழிலாளர் சங்க காரியதரிசி எம். வெங்கடகிருஷ்ணன் இல்லத்திற்கு ஹார்வி மில் தொழிலாளர் போனஸ் விஷயமாய் கலந்து பேசுவதற்கு போய்க்கொண்டிருக்கும் போது சேதுராஜா தெருவில் மேற்படி கட்சியை சேர்ந்த பழிவாங்கப்பட்ட தொழிலாளர் என்று சொல்லப்படும் நால்வர், இருவரையும் தாக்கிவிட்டுப் போய்விட்டனர், நல்லசிவனை அதிகமாக தாக்கி யிருக்கின்றனர், வந்த நால்வரில் இருவரே தாக்குதல் வேலை செய்திருக்கின்றனராம்!

மேலே கண்ட இருவரும் 21-ந்தேதியன்று தூத்துக்குடிக்குவந்து (நல்லசிவனும், தங்கமணியும்) ஹார்வி மில் தொழிலாளர் சங்கக் கமிட்டிக் கூட்டத்தில் கலந்து போனஸ் விஷயமாக பேசியதாகவும் அதுசமயம் பழிவாங்கப்பட்ட தொழிலாளர் விஷயத்தைப் பற்றி ஒருவர் கேட்டதாகவும் அந்த விஷயத்தை போனஸ் விஷயத்தில் சேர்த்து குழப்ப வேண்டாம், போனஸ் விஷயத்தில் ஒற்றுமையான அபிப்பிராயம் ஏற்பட்டுவிட்டால் பின்னர் இந்த ஒற்றுமையின் மூலம் பழிவாங்கப்பட்ட தொழிலாளர் விஷயத்தையும் கவனிக்கலாமென்று தங்கமணி, நல்லசிவம் ஆகிய இருவரும் கூறியதாகத் தெரிகிறது. இந்த விஷயம் பழிவாங்கப்பட்ட தொழிலாளர்களுக்கு (கம்யூனிஸ்ட்) தெரிந்து அவர்கள் திட்டமிட்டே மேலே கண்ட செயலை செய்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

கமிட்டிக் கூட்டம் நடந்த அன்று இரவு 2-மணி ரயிலில் அம்பாசமுத்திரத்திற்கு இருவரும் (நல்லசிவன் தங்கமணி) சென்று அங்குள்ள தொழிற்சங்கங்களில் போனஸ் விஷயத்தை கலந்துவிட்டு அதை இங்குவந்து தொழிற்சங்கத்தில் தெரிவிக்கவே 22-ந்தேதி இரவு வந்தனர். கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த யாரும் இவர்களை அழைத்து வர ரயில்வே ஸ்டேஷனுக்குச் செல்லவில்லை. மில் தொழிற்சங்க பிரதிநிதி (தி. மு. க.)யும், கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து விலகியவர்களும் ஸ்டேஷனுக்குச் சென்று இருவரையும் (நல்லசிவம், தங்கமணி) எம். வெங்கடகிருஷ்ணன் இல்லத்திற்கு அழைத்துச் சென்றனர், பழிவாங்கப்பட்ட தொழிலாளிகள் 4 பேர்கள் [கம்யூனி] பின்னாலே சென்று நல்லசிவனிடம் தங்களுக்கு வேலை வாங்கிக் கொடுக்கும் விஷயமாக வாதங்கள் நடத்திக் கொண்டுபோனதாகவும் தெரிகிறது.

சிற்க, இருவரும் தாக்கப்பட்ட விஷயம் கம்யூனிஸ்ட் கட்சி முக்கியஸ்தர்களுக்குத் தெரிந்து அவர்கள் அங்கு வந்தனர், தங்கமணி மிகவும் ஆத்திரத்துடன் தாக்கப்பட்ட விபரங்களைக்கூறி பயமுறுத்தல், பலாத்காரம் செய்து காரியங்களைபெற்றுவிடலாமென்று நினைப்பதை கண்டித்து பேசியதாக தெரிகிறது, பின்னர் அங்கிருந்துனூருக்கு இரவு2மணி ரயிலில் செல்ல ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்றனர், அதற்குள் மில் இரவு வேலை சிறுத்தப்பட்டு தொழிலாளர்கள் அங்குள்ள பிளாட்பாரத்தில் கூடிவிட்டனர் அங்கேயும் கட்சி ஆபீஸில் பேசியதை போலவே மிகவும் ஆத்திரத்துடன் பேசிவிட்டு தி மு. க தோழர்களை பாராட்டிவிட்டு சென்றார்கள்,

---

மதிவாணன்

திருமழிசை தி. மு. கழகச் செயலாளர் டி, கே. போருரான் அவர்களின் துணைவியார் நவநீதம் அம்மையார் ஈன்றெடுத்த ஆண் குழந்தைக்கு 30-3-55-ம் நாளன்று தோழர் டி. சண்முகம் எம். எல். ஏ. முன்னிலையில் தோழர் என். வி. நடராசன் அவர்களால் மதிவாணன் என பெயரிடப்பட்டது இதன் நினைவாக திராவிடன் வளர்ச்சிக்கு ரூபாய் 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது. வரபெற்றோம்—நன்றி—நிர்வாகி

மதுரை நகர தி. மு. க. கிளை

புதிய செயற்குழு தேர்தல்

●

மத்திய திராவிட முன்னேற்றக் கழக உத்திரவுப்படி 27—3—55 ஞாயிறு அழகரடி ஆச்சி மடத்தில் (கரூர் கணபதி சுந்தரம் பயில்வான் தேகப் பயிற்சி கழகம்) தேர்தல் அதிகாரி எஸ். முத்து அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

செயலாளர் பதவிக்கு தோழர் பி. கே. சேதுராமன் அவர்களும், துணைச்செயலாளர் பதவிக்கு தோழர் என். எஸ். ராசா அவர்களும் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பொருளாளர் பதவிக்கு தோழர் எஸ். முனியப்பன், தோழர் எம். பி. அப்புலு ஆகியோர் போட்டி யிட்டனர். எஸ். முனியப்பன் அதிக வாக்கு பெற்று தேர்ந்தெடுக்கப்பட்டார். மற்றும் 18 செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பின்னர் மதுரை நகரக்கிளை மாவட்டப் பிரதிநிதிகள் தேர்தல், தோழர் சி. பி சிற்றரசு தலைமையில் நடைபெற்றது. 24 தோழர்கள் போட்டியிட்டனர். அவர்களில் 20 தோழர்கள் அதிக வாக்கு பெற்று தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களின் பெயர்கள்.

1. அறமன்னன், 2. எம். பி. அப்புலு, 3. ல. வ கிருட்டினன், 4. எஸ். முத்து, 5. அ. மீனாட்சி சுந்தரம், 6. முத்திருளாண்டி, 7. இரா. முருகேசன், 8. த. முத்தையா, 9. வி. நாகசுந்தரம், 10. எ. எம். பால், 11. க. பெருமாள், 12. எஸ். பாண்டி, 13. மது. இ. பழனியப்பன், 14. கு. இரத்தினம், 15. வ. இராவணன்; 16. பி. இராமானுசன், 17. ந. வ. சோலைமலை, 18. பி. கே. சேதுராமன், 19. ப. சுந்தரம், 20 கு. வேலு.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர், என். வி. நடராசன், சோமு அச்சகம் 16, ரிலையன்ஸ் ரைஸ் மில் தெரு, சென்னை 1.